winmeen.com

# மூன்றாம் வார நடப்பு நிகழ்வுகள்

## ஆகஸ்ட் 2021

ஆகஸ்ட் 16-21

**1. வருமான வரி சட்டத்தில், சர்ச்சைக்குரிய முன்தேதியிட்டு வரி வசூல்செய்யும் முறையை நீக்குவதற்காக, அண்மையில், வரிவிதிப்பு சட்டங்கள் மசோதா, 2021 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. 2012ஆம் ஆண்டில் முன்தேதியிட்டு வரி வசூல் செய்யும் முறை சேர்க்கப்பட்டபோது நிதியமைச்சராக இருந்தவர் யார்?**

அ) ப சிதம்பரம்



**ஆ) பிரணாப் முகர்ஜி ☑**

இ) அருண் ஜேட்லி

ஈ) ஜஸ்வந்த் சிங்

✓ வரிவிதிப்பு சட்டங்கள் (திருத்த) மசோதா, 2021 ஆனது ஆகஸ்ட் 6, 2021 அன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. வரிவிதிப்பு சட்டங்கள் (திருத்த) மசோதா, 1961ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தை திருத்துகிறது. 2012 மே.28ஆம் தேதிக்கு முன்னர் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், முன்தேதியிட்டு வரி வசூல் செய்யும் முறை திருத்தத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் எந்த வரி கோரிக்கையும் வைக்கப்படாது. பிரணாப் முகர்ஜி நிதியமைச்சராக இருந்தபோது, 2012' இல் முன்தேதியிட்டு வரி வசூல் செய்யும் முறை சேர்க்கப்பட்டது.

---

**2. சமீபத்தில் மூன்றாண்டுகாலம் பதவிநீட்டிப்புப்பெற்றவரும் தேசிய பெண்கள் ஆணையத்தின் தற்போதைய தலைவருமானவர் யார்?**

அ) அஜய் தியாகி



ஆ) M R குமார்

**இ) ரேகா சர்மா ☑**

ஈ) டாக்டர் திருதி பானர்ஜி

✓ 2021 ஆகஸ்ட்.7 அன்று தேசிய பெண்கள் ஆணையத்தின் தற்போதைய தலைவராக இருந்து வரும் ரேகா சர்மாவுக்கு மூன்றாண்டு காலத்திற்கு பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. 07.08.2021 அல்லது 65 வயதுவரை அல்லது அடுத்த உத்தரவு வரும் வரை அவர் இப்பதவியில் இருப்பார்.

---

**3. மும்பையின் புகழ்பெற்ற மரைன் டிரைவின் பதிப்பாகக் கூறப்படும் 'கங்கை பாதை' திறக்கப்படுகிற இந்திய நகரம் எது?**

அ) கொல்கத்தா



ஆ) வாரணாசி

**இ) பாட்னா ☑**

ஈ) கான்பூர்

✓ பீகார் மாநிலத்தின் தலைநகரமான பாட்னா, மும்பையின் புகழ்பெற்ற மரைன் டிரைவின் பதிப்பைப் பெறவுள்ளது. 5.50 கிமீ நீளமுள்ள திஹா–AN சின்ஹா இன்ஸ்டிடியூட் கங்கா பாதையானது அடுத்த ஆண்டு திறக்கப்படவுள்ளது. நெரிசலான அசோக் ராஜபாத்தில் போக்குவரத்தை குறைப்பதற்காக கங்கை நதியின் தென்கரையில் வரவிருக்கும் ₹3,390 கோடி மதிப்பிலான திட்டத்தின் ஒருபகுதியாக 'கங்கை பாதை' உள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த நீளம் 20.50 கிமீ ஆகும்.

---

**4. சமீபத்தில், ஒரு முகவர் வங்கியாக செயல்பட, ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட வங்கி எது?**

அ) HDFC வங்கி

ஆ) ஐசிஐசிஐ வங்கி

இ) கனரா வங்கி

**ஈ) கர்நாடக வங்கி ☑**

✓ அண்மையில், அரசு வணிகங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்காக, ரிசர்வ் வங்கியால் கர்நாடக வங்கி ஒரு 'முகவர் வங்கி'யாக மாற்றப்பட்டது. நடுவணரசு மற்றும் மாநிலங்களின் வருவாய் ரசீதுகள் & கொடுப்பனவுகள், ஓய்வூதிய கொடுப்பனவுகள், முத்திரைக் கட்டண வசூல் போன்ற அரசு வணிகங்களை மேற்கொள்ள 'முகவர் வங்கி' என்ற முறையில் கர்நாடக வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

**5. நடப்பாண்டின் (2021) ராணுவ விளையாட்டுக்களை நடத்துகிற நாடு எது?**

**அ) ரஷ்யா ☑**

ஆ) இந்தியா

இ) பிரான்ஸ்

ஈ) அமெரிக்கா

✓ 2021 ஆக.22ஆம் தேதி முதல் செப்.4ஆம் தேதி வரை நடைபெறவுள்ள பன்னாட்டு இராணுவ விளையாட்டுகளில் பங்கேற்க இந்திய இராணுவத்தின் 101 உறுப்பினர் குழு ரஷ்யா செல்கிறது.

✓ இராணுவ ஸ்கவுட் மாஸ்டர்ஸ் போட்டி (ASMC), எல்ப்ரஸ் ரிங், போலார் ஸ்டார், துப்பாக்கி சுடும் எல்லை மற்றும் உயரமான பகுதி நிலப்பரப்பில் பல்வேறு பயிற்சிகள், பனியில் செயல்பாடுகள், துப்பாக்கி சுடும் திறன்கள், பல்வேறு போட்டிகளில் தடைகள் நிறைந்த நிலப்பரப்பில் போர் பொறியியல் திறன்களை காட்டும் பாதுகாப்பான பாதை விளையாட்டுகள் உள்ளிட்ட பல போட்டிகளில் இந்தக் குழுவினர் பங்கேற்பர். திறந்த நீர் மற்றும் பால்கன் வேட்டை விளையாட்டுகளுக்கு இந்தக் குழுவைச் இருவர் பார்வையாளர்களாக இருப்பர்.

---

**6. 2021 டோக்கியோ ஒலிம்பிக்கின் ஆடவர் கால்பந்தில் தங்கப் பதக்கம் வென்ற நாடு எது?**

அ) அர்ஜென்டினா



ஆ) ஆஸ்திரேலியா

**இ) பிரேசில் ☑**

ஈ) எகிப்து

✓ 2021 ஆகஸ்ட்.7 அன்று நடந்த டோக்கியோ ஒலிம்பிக்கின் ஆடவர் கால்பந்தில், பிரேசில் அணி 2–1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது. பிரேசில் அணிக்காக மால்கம் மற்றும் மேத்தியஸ் குன்ஹா கோலடித்தனர். ஸ்பெயின் அணிக்காக மைக்கேல் ஒயர்ஸபால் கோலடித்தார். மெக்ஸிகோ, 3–1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வீழ்த்தி வெண்கலம் வென்றது. மகளிர் கால்பந்தில் தங்கப் பதக்கம் வெல்ல, 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்ததால் கனடா 3–2 என்ற கோல் கணக்கில் சுவீடனை வீழ்த்தியது. ஆஸ்திரேலியாவை 4–3 என்ற கணக்கில் வென்று, அமெரிக்கா வெண்கலம் தை வென்றது.

---

**7. இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையர், 'FEMBoSA'இன் 11 ஆவது ஆண்டுக்கூட்டத்தை தொடங்கிவைத்தார். இந்தியாவின் தற்போதைய தலைமை தேர்தல் ஆணையர் யார்?**

அ) அச்சல் குமார் ஜோதி



ஆ) சுனில் அரோரா

இ) ராஜீவ் குமார்

**ஈ) சுஷில் சந்திரா ☑**

✓ இந்தியாவின் தலைமை தேர்தல் ஆணையரும் FEMBoSA'இன் தற்போதைய தலைவருமான சுஷில் சந்திரா, தேர்தல் ஆணையர்கள் இராஜீவ் குமார் மற்றும் A C பாண்டே ஆகியோருடன் இணைந்து ஆக.11 அன்று தெற்காசியாவின் தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் (FEMBoSA) மன்றத்தின் 11ஆவது ஆண்டுக் கூட்டத்தை தொடங்கி வைத்தார். இக்கூட்டம், மெய்நிகர் முறையில், பூட்டானின் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டது.

---

**8. இந்தியாவின் முதல் 'வாட்டர்+' நகரமாக அறிவிக்கப்பட்டுள்ள நகரம் எது?**

அ) கொல்கத்தா



ஆ) பெங்களூரு

**இ) இந்தூர் ☑**

ஈ) ஹைதராபாத்

✓ நாட்டின் தூய்மையான நகரமான இந்தூர், 'ஸ்வச் சர்வேக்ஷன்–2021' இன்கீழ் இந்தியாவின் முதல் 'வாட்டர்+' நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது என மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார். இதற்கான சான்றிதழை நடுவணரசிடமிருந்து இந்தூர் நகரம் பெற்றது.

**9. "வெள்ளையனே வெளியேறு இயக்கம்" குறித்த கண்காட்சியை தொடக்கியுள்ள அமைச்சகம் எது?**



**அ) கலாச்சார அமைச்சகம் ☑**

ஆ) சுற்றுலா அமைச்சகம்

இ) கல்வி அமைச்சகம்

ஈ) வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

- ✓ 2021 ஆக.8 அன்று கலாச்சார அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி, புது தில்லியில் 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' குறித்த கண்காட்சியைத் தொடங்கிவைத்தார். இந்தியா விடுதலை அடைந்த 75ஆவது ஆண்டை கொண்டாடும், "ஆசாதி கா அம்ரித மகோத்சவத்தின்" ஒருபகுதியாக, இந்திய தேசிய ஆவணக்காப்பகம் நவ.8வரை தொடரும் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

---

**10. சயீத் தல்வார் – 2021 என்ற பயிற்சியை நடத்திய நாடுகள் எவை?**



அ) இந்தியா மற்றும் ரஷ்யா

**ஆ) இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ) இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா

ஈ) இந்தியா மற்றும் அமெரிக்கா

- ✓ இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் இடையே அபுதாபியில் 'சயீத் தல்வார்' கூட்டு கடற்படை பயிற்சி நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படை சார்பில் INS கொச்சி போர்க்கப்பல், இரண்டு ஒருங்கிணைந்த சீ கிங் எம்கே 42பி ஹெலிகாப்டர்கள் பங்கேற்றன.
- ✓ ஐக்கிய அரபு அமீரகம் சாா்பில் அல்–தாஃப்ரா போர்க் கப்பல், ஏஎஸ்565பி பேந்தர் ஹெலிகாப்டர் பயிற்சியில் ஈடுபட்டன. இருநாடுகளின் கடற் படைகளுக்கு இடையிலான திறன் & ஒருங்கிணைப்பை மேம்படுத்த தேடுதல், மீட்பு, மின்னணு தொழில்நுட்பம் உள்பட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ரூ.100 லட்சம் கோடியில் 'உத்வேகம்' திட்டம்: பிரதமா் நரேந்திர மோடி**

நாட்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ரூ.100 லட்சம் கோடி மதிப்பில் 'உத்வேகம்' திட்டம் (கதி சக்தி) செயல்படுத்தப்படும் என்று சுதந்திர தின உரையில் பிரதமா் நரேந்திர மோடி அறிவித்தாா். அடுத்த 25 ஆண்டுகளை நாட்டுக்குப் பெருமைதரும் ஆண்டுகளாக மாற்ற வேண்டுமென்று நாட்டு மக்களுக்கு அவா் அழைப்பு விடுத்தாா். நாட்டின் 75–ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தில்லி செங்கோட்டையில் பிரதமா் மோடி தேசியக் கொடியேற்றினாா். அதையடுத்து நாட்டு மக்களுக்கு அவா் ஆற்றிய உரை: நாடு கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறது. ஆனால், வளா்ச்சியின் உச்சத்தை இன்னும் அடைய வேண்டியிருக்கிறது. அனைத்துக் கிராமங்களுக்கும் சாலை வசதிகள், அனைத்துக் குடும்பத்துக்கும் வங்கிக் கணக்கு, சமையல் எரிவாயு இணைப்பு, அனைத்து தகுதியான நபா்களுக்கும் மருத்துவக் காப்பீடு ஆகியவற்றை ஏற்படுத்தித் தர வேண்டியுள்ளது.

**வரலாற்று உச்சம்:** நாட்டில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு சா்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளும் அந்நியச் செலாவணி கையிருப்பும் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளன.

சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடவுள்ள அடுத்த 25 ஆண்டுகளில் புதிய இலக்குகளுடன் பயணிக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் இந்தியா முன்னின்று விளங்குவதை மக்கள் உறுதி செய்ய வேண்டும். 'தற்சாா்பு இந்தியா' என்ற இலக்கை அடுத்த 25 ஆண்டுகளில் அடைய வேண்டும்.

**அனைவரின் முயற்சி:**

அனைவருடன் இணைந்து, அனைவருடைய நம்பிக்கையின் அடிப்படையில், அனைவரின் முயற்சியுடன், அனைவருக்குமான வளா்ச்சிக்காகப் பாடுபட வேண்டும். நாட்டின் இலக்குகளை அடைவதற்கு இந்தக் கொள்கை மிகவும் முக்கியமானது. நாட்டின் வளா்ச்சி இலக்குகளை அடைவதற்கு அனைவருடைய முயற்சியும் அவசியம். 'உத்வேகம்' தேசிய பெருந்திட்டத்தின் கீழ் ரூ.100 லட்சம் கோடியில் போக்குவரத்து உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. இத்திட்டம் எதிா்கால பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருக்கும்.

**ஹைட்ரஜன் திட்டம்:**

எரிசக்தித் துறையில் 2047–ஆம் ஆண்டுக்குள் (சுதந்திர நூற்றாண்டு) தற்சாா்பு அடைவதற்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது. அதை அடையும் நோக்கில், மாசுபாட்டை ஏற்படுத்தாத ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. தேசிய ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரித்து, அதை மற்ற நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் மையமாக இந்தியாவை மாற்றுவதற்கு இலக்கு நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

**'வந்தே பாரத்' ரயில்கள்:**

நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டைக் கொண்டாடும் வகையில், 75 வாரங்களுக்குள் நாடு முழுவதும் 75 'வந்தே பாரத்' ரயில்கள் இயக்கப்படவுள்ளன. வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரங்கள் அனைத்தும் விரைவில் ரயில்கள் மூலமாக இணைக்கப்படும். மக்களிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் நோக்கில், மதிய உணவுத் திட்டம் உள்ளிட்டவற்றுக்காக வழங்கப்படும் அரிசியில் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவுள்ளது.

**சிறு விவசாயிகளின் நலன்:** நாட்டில் உள்ள விவசாயிகளில் 80 சதவீதம் போ் சிறு விவசாயிகளாக உள்ளனா். அவா்களது நலனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு விவசாயிகள் நாட்டின் பெருமையாக மாற வேண்டும்.

தலித்துகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினா், பழங்குடியினா், பொதுப் பிரிவைச் சோ்ந்த ஏழைகள் ஆகியோருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் உரிய இடஒதுக்கீடு கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்து வருகிறது. மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கான இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**தாய்மொழியில் கல்வி:**

ஏழ்மைக்கு எதிரான போராட்டத்தில் புதிய தேசிய கல்விக் கொள்கை முக்கியப் பங்கு வகிக்கும். அக்கொள்கை வாயிலாக தாய்மொழிக் கல்வி ஊக்குவிக்கப்படும். 2–ஆம் உலகப் போருக்குப் பிறகு நாடுகளுக்கிடையேயான தொடா்பின் தன்மை மாறியது. கரோனா தொற்று பரவல் கட்டுக்குள் வந்தபிறகும் சா்வதேசத் தொடா்பு மாற்றங்களைச் சந்திக்கும். கிராமப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் 2024–ஆம் ஆண்டுக்குள் குடிநீா்க் குழாய் இணைப்பு வழங்கப்படும். கடந்த 2 ஆண்டுகளில் 4.5 கோடி வீடுகளுக்கு குடிநீா்க் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் தயாரிப்போம்:**

அனைத்துத் துறைகளிலும் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தை மேம்படுத்த வேண்டும். பல்வேறு துறைகளுக்கு உற்பத்தி சாா்ந்த ஊக்கத்தொகை திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. 7 ஆண்டுகளுக்கு முன் ரூ.56,000 கோடி மதிப்பிலான செல்லிடப்பேசிகளை இந்தியா இறக்குமதி செய்து வந்தது. தற்போது சுமாா் ரூ.21,000 கோடி மதிப்பிலான செல்லிடப்பேசிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சுற்றுச்சூழலைக் காப்பதற்கான நடவடிக்கைகள் தொடா்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரி செலுத்தும் விதிமுறைகள் எளிமையாக்கப்பட்டு வருகின்றன.

**தக்க பதிலடி:**

எதிரிகளுக்கு நாட்டின் எல்லைப் பகுதிகளில் தக்க பதிலடியை இந்தியா வழங்கி வருகிறது. எதிரிப் படைகள் மீது துல்லியத் தாக்குதலும் வான்வழித் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் எந்தவொரு கடினமான முடிவையும் நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தயங்காது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஜம்மு–காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளா்ச்சிப் பணிகள் கண்கூடாகத் தெரிகின்றன. அங்கு தொகுதி மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஜம்மு–காஷ்மீா் பேரவைக்குத் தோ்தல் நடத்தப்படும்.

**விலைமதிப்பற்ற தருணம்:**

இதுதான் இந்தியாவுக்கான விலைமதிப்பற்ற தருணம். இளைஞா்கள், விவசாயிகள் உள்ளிட்ட தற்காலத் தலைமுறையினா் கற்பனைக்கு எட்டாத இலக்குகளையும் அடையும் திறமை கொண்டவா்களாக உள்ளனா் என்றாா் பிரதமா் மோடி.

---

**2. சுதந்திர தின விழாவில் விருது பெற்றோா் விவரம்**

சுதந்திர தின விழாவில் பல்வேறு விருதுகளை தமிழக முதல்வா் மு.க.ஸ்டாலின் வழங்கினாா். விருது பெற்றோா் விவரம்:

**அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அப்துல் கலாம் விருது:** திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இயற்பியல் பள்ளியில் நேரற்ற இயக்கவியல் (சாய் கண்ய்ங்ஹழ் ஈஹ்ய்ஹம்ண்ஸ்ரீள்) துறை பேராசிரியா் மு.லட்சுமணனுக்கு அறிவியல் தொழில்நுட்பத்துக்கான அப்துல் கலாம் விருது வழங்கப்பட்டது. இந்த விருதானது ரூ.5 லட்சம் காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

**முதல்வரின் நல் ஆளுமை விருது:** சென்னை கிண்டி அரசு கரோனா மருத்துவமனை இயக்குநா் நாராயணசாமிக்கும், மாற்றுத் திறனாளி மாணவா்களுக்காக கல்வித் தரத்தை உயா்த்த நடவடிக்கை எடுத்ததற்காக மாநிலக் கல்லூரிக்கும், நில எடுப்பு நடைமுறைகள் மின் தொகுப்பினால் எளிமையாக்கப்பட்டு வெளிப்படைத் தன்மை கொண்டு வந்ததற்காக, வேலூா் மாவட்ட வருவாய் அலுவலராக இருந்து இப்போது நிலநிா்வாக இணை இயக்குநராக உள்ள ஜெ.பாா்த்திபனுக்கும் நல் ஆளுமை விருது அளிக்கப்பட்டது.

**மாற்றுத் திறனாளிகள் நலன்:** மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாகச் செயல்பட்டு வரும் நிறுவனமாக, திருச்சி ஹோலி கிராஸ் சா்வீஸ் சொசைட்டி, மாற்றுத் திறனாளிகளுக்காக பணியாற்றி வரும் சிறந்த மருத்துவராக சேலம் அழகாபுரம் பூ.பத்மப்ரியா, சிறந்த சமூகப் பணியாளராக திருநெல்வேலி மரிய அலாசியஸ் நவமணி, அதிகளவில் வேலைவாய்ப்பு அளித்ததற்காக சென்னை அய்யப்பன்தாங்கலைச் சோ்ந்த வீ ஆா் யுவா் வாய்ஸ் நிறுவனமும் விருதுக்காக தோ்வு செய்யப்பட்டன. இந்த விருதுகள் 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழை அடக்கியது. மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாகச் செயல்படும் சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியாக, ஈரோடு மாவட்ட வங்கி தோ்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

**சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான விருது:** சிறந்த மாநகராட்சியான தஞ்சாவூருக்கு ரூ.25 லட்சம், சிறந்த நகராட்சிகளான உதகை, திருச்செங்கோடு, சின்னமனூருக்கு முறையே ரூ.15 லட்சம், ரூ.10 லட்சம் மற்றும் ரூ.5 லட்சம், சிறந்த பேரூராட்சிகளான கல்லக்குடி, மேல்பட்டம்பாக்கம், கோட்டையூருக்கு முறையே ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம் மற்றும் ரூ.3 லட்சம் அளிக்கப்பட்டன.

சென்னை மாவட்டத்தைச் சோ்ந்த அரவிந்த் ஜெயபால் (58) குழந்தைகளின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தியதுடன், பின்தங்கிய மாணவா்களுக்கு விமானப் பயண அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளாா்), கரோனா காலத்தில் உதவிகளைச் செய்த திருவாரூா் மாவட்டம் நெ.பசுருதீன், நீலகிரி மாவட்டம் ச.ரஞ்சித்குமாா் ஆகியோா் மாநில இளைஞா் விருதுக்கான ஆண்கள் பிரிவுக்கு தோ்வு செய்யப்பட்டனா். ரத்ததானத்தை வலியுறுத்தி செயல்பட்டு வரும் திண்டுக்கல் மாவட்டம் க.மகேஸ்வரி, முதியோா் நலன் காக்கப் பாடுபடும் கடலூா் மாவட்டம் அமலா ஜெனிபா், கரோனா காலத்தில் இறந்தவா்களின் உடலை அடக்கம் செய்ய உதவிய சென்னையைச் சோ்ந்த எஸ்.மீனா ஆகியோா் மாநில இளைஞா் பெண்கள் பிரிவுக்கு தோ்வு செய்யப்பட்டனா். ரூ.50,000 காசோலை, பாராட்டுச் சான்று, பதக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியது இவ்விருது.

**அவ்வையாா் விருது**

சக்தி மசாலா நிறுவனத்தைச் சோ்ந்த மருத்துவா் சாந்தி துரைசாமிக்கு அவ்வையாா் விருது வழங்கப்பட்டது. மசாலா நிறுவனம் மட்டுமின்றி, சக்தி தேவி தொண்டு அறக்கட்டளைமூலம் உடல், மனநலம் குன்றிய குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை, அறிவுசாா் ஊனமுற்றோருக்காக சக்தி பள்ளி, சக்தி ஆட்டிசம் சிறப்புப் பள்ளி, சக்தி மருத்துவமனை மூலம் 15-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சேவை, 41 அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறாா். இந்த விருதானது ரூ.1 லட்சத்துக்கான காசோலை, 8 கிராம் பதக்கம், சான்றிதழ், பொன்னாடை ஆகியன அடங்கியது.

**சிறந்த மூன்றாம் பாலினா் விருது:** தூத்துக்குடி மாவட்டத்தைச் சோ்ந்த கிரேஸ் பானு, சிறந்த மூன்றாம் பாலினா் விருதுக்கு தோ்ந்தெடுக்கப்படுள்ளாா்.

---

**3. விமானப் படை விமானிகள் இருவருக்கு வாயு சேனா பதக்கம்: குடியரசுத் தலைவா் வழங்கினாா்**

விமானப் படையினரின் சிறப்பான பணிகளுக்கு வழங்கப்படும் வாயு சேனா பதக்கம் ஸ்குவாட்ரான் லீடா் தீபக் மோகனன், விங் கமாண்டா் உத்தா் குமாா் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவா் ராம்நாத் கோவிந்த் இந்தப் பதக்கங்களை வழங்கினாா்.

இந்திய விமானப் படையின் விமானி ஸ்குவாட்ரான் லீடா் தீபக் மோகனன், கடந்த ஏப்ரல் 2017 முதல் கடலோரக் காவல் படை ஸ்குவாட்ரான் பணியில் ஈடுபட்டு வருகிறாா். கடந்த ஆண்டு செப்டம்பா் 4-இல் 3.40 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயுடன் பயணித்துக் கொண்டிருந்த எம்டி டயமண்ட் என்ற பிரம்மாண்ட கப்பலில் இலங்கை அருகே பயங்கர தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, சேத்தக் ஹெலிகாப்டரின் கேப்டனாகப் பணியாற்றிய ஸ்குவாட்ரான் லீடா் தீபக் மோகனன், அதீத துணிச்சலை வெளிப்படுத்தி தீயை அணைப்பதில் தமது உயிரையும் பொருட்படுத்தாது சிறப்பாக பணியாற்றினாா். எண்ணெய்க் கசிவு மற்றும் மிகப்பெரிய விபத்து நடைபெறாமல் தடுக்கப்பட்டதில் பெரும் பங்கு வகித்தாா். இத்தகைய தலைசிறந்த வீரத்தை கௌரவிக்கும் வகையில் ஸ்குவாட்ரான் லீடா் தீபக் மோகனனுக்கு வாயு சேனா விருது வழங்கப்பட்டது.

இந்திய விமானப் படையின் பைலட் விங் கமாண்டா் உத்தா் குமாா், கடந்த 2017, ஜூலை மாதத்திலிருந்து சுகோய்-30 ரக போா் விமானத்தின் விமானியாகப் பணியாற்றுகிறாா். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 4-இல் வானில் பறந்து கொண்டே தமது விமானத்தில் இருந்து மற்றொரு விமானத்திற்கு எரிபொருளை நிரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், மற்றொரு சுகோய்-30 ரக போா் விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த எரிவாயு நிரப்பும் குழாய் உடைந்து போனது. எனினும் குழாயின் ஒரு முனை விங் கமாண்டா் உத்தா் குமாரின் விமானத்தில் தொடா்ந்து பொருத்தியிருக்க, எரிவாயு கசியும் அபாயம் ஏற்பட்டது. மேலும், எரிவாயு குழாய் உடைந்த விமானத்தின் சீரான இயக்கமும் தடைப்பட்டது.

இதுபோன்ற எதிா்பாராத அபாய நிலையை உணா்ந்து எரிவாயு கசிவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விமானப் பணியாளா்களுக்கு விங் கமாண்டா் உத்தா் குமாா் உடனடியாக ஆலோசனை வழங்கினாா். மிகக் கவனமாகத் திட்டமிட்டு விமானத்தை பாதுகாப்பாகத் தரையிறக்கினாா். அவரது பாராட்டத்தக்க வீரம் மற்றும் விமானம் ஓட்டும் திறமையால் மிகப்பெரிய தீ விபத்து தடுக்கப்பட்டதுடன், 2 விமானங்களும் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டன. இந்தப் போற்றுதலுக்குரிய வீர தீரச் செயலுக்காக விங் கமாண்டா் உத்தா் குமாருக்கு வாயு சேனா பதக்கம் வழங்கப்பட்டது.

---

**1.** 2020 டோக்கியோ ஒலிம்பிக்கின் பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்த நாடு எது?



**அ) அமெரிக்கா ☑**

ஆ) சீனா

இ) ஜப்பான்

ஈ) இந்தியா

✓ 2020 டோக்கியோ விளையாட்டுக்கள், ஆக.8 அன்று நிறைவுற்றதாக பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தின் தலைவர் தாமஸ் பாக் அறிவித்தார். அமெரிக்கா, 39 தங்கங்கள் வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. சீனாவை அமெரிக்காவைவிட ஒரு தங்கம் குறைவாகப் பெற்று இரண்டாமிடம் பெற்றது.

✓ போட்டியை நடத்திய ஜப்பான் 27 தங்கங்களுடன் மூன்றாமிடத்தையும், கிரேட் பிரிட்டன் 22 தங்கப்பதக்கங்களுடன் நான்காமிடத்தையும் 20 தங்கங்களுடன் ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டி ஐந்தாமிடத்தையும் பிடித்தது. இந்தியா 1 தங்கம், 2 வெள்ளி மற்றும் 4 வெண்கலத்துடன் 48ஆவது இடத்தைப் பிடித்தது.

---

**2.** ஆண்டுதோறும் சர்வதேச பழங்குடிகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?




**அ) ஆகஸ்ட் 09 ☑**

ஆ) ஆகஸ்ட் 10

இ) ஆகஸ்ட் 11

ஈ) ஆகஸ்ட் 12

✓ சர்வதேச பழங்குடிகளின் நாளானது ஆண்டுதோறும் ஆகஸ்ட்.9 அன்று கொண்டாடப்படுகிறது. "Leaving no one behind: Indigenous peoples and the call for a new social contract" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். உலகம் முழுவதும் 90 நாடுகளில், 476 மில்லியனுக்கும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இது, உலக மக்கள்தொகையில் 6.2% ஆகும். பழங்குடி மக்கள் தனித்துவமான கலாசாரம், மரபுகள் மற்றும் மொழிகள் ஆகியவற்றின் பரந்த பன்முகத் தன்மையைக் கொண்டவர்கள்.

---

**3.** சமீபத்தில், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 79ஆவது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. மும்பையில் எந்த இடத்திலிருந்து கொண்டு 'மகாத்மா' காந்தி வெள்ளையனை விரட்டுவதற்காக "செய் அல்லது செத்துமடி" என முழக்கமிட்டார்?



**அ) ஆகஸ்ட் கிரந்தி மைதானம் ☑**

ஆ) ராஜாபாய் மணிக்கூண்டு

இ) அமைதி கோபுரம்

ஈ) மணி பவன்

✓ 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 79ஆம் ஆண்டுவிழா 2021 ஆகஸ்ட்.8 அன்று அனுசரிக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு இதே நாளன்று, 'தேசத்தந்தை' 'மகாத்மா' காந்தி, பிரிட்டிஷாரை நாட்டைவிட்டு விரட்டும் நோக்கில் அனைத்து இந்தியர்களை நோக்கியும் "செய் அல்லது செத்து மடி" என்று முழக்கமிட்டார். மும்பையிலுள்ள ஆகஸ்ட் கிரந்தி மைதானம் (கோவாலியா) என்ற இடத்திலிருந்து இந்த இயக்கம் தொடங்கியது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் கிரந்தி நாளாக இது கடைப்பிடிக்கப்படுகிறது.

---

**4.** ஒலிம்பிக் தடகளப்போட்டிகளில் இதுவரை எத்தனை பதக்கங்க –ளை இந்தியா வென்றுள்ளது?



**அ) 1 ☑**

ஆ) 2

இ) 3

ஈ) 10

✓ நீரஜ் சோப்ரா, ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப்போட்டியில் 87.58 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தடகளத்தில் இந்தியாவுக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க தங்கப்பதக்கத்தை வென்றுதந்தார். ஒலிம்பிக் தடகளத்தில், இது, இந்தியா வெல்லும் முதல் தங்கப்பதக்கமாகும்.

---

**5.** நாட்டிலுள்ள எத்தனை காவல்துறை அதிகாரிகளுக்கு உள்துறை அமைச்சரின் சிறந்த புலனாய்வு விருது வழங்கப்பட்டுள்ளது?




அ) 151

**ஆ) 152 ☑**

இ) 155

ஈ) 145

✓ 2021ஆம் ஆண்டுக்கான, "சிறந்த புலனாய்வுக்கான மத்திய உள்துறை அமைச்சரின் பதக்கம்", அகில இந்திய அளவில் 152 காவல்துறை அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வில் சிறந்த செயல்திறனை ஊக்குவிக்கவும், புலனாய்வில் சிறப்பாக செயல்படும் அதிகாரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கவுமாக, கடந்த 2018ஆம் ஆண்டில் இவ்விருது நிறுவப்பட்டது. இந்த ஆண்டுக்கான (2021) விருதாளர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்த நால்வர் உட்பட, 28 பேர் மகளிர் அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**6.** நுண்–உணவு செயலாக்க நிறுவனங்கள் திட்டத்தின் PM முறைப்படுத்தலின்கீழ் 7,500 SHG உறுப்பினர்களுக்கு தொடக்க நிதியாக பிரதமரால் அறிவிக்கப்பட்ட நிதி எவ்வளவு?



அ) ₹35 கோடி

ஆ) ₹45 கோடி

இ) ₹15 கோடி

**ஈ) ₹25 கோடி ☑**

✓ 2021 ஆகஸ்ட்.12 அன்று பிரதமர் நரேந்திர மோடி, உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகத்தின் PMFME (PM Formalisation of Micro Food Processing Enterprises) திட்டத்தின்கீழ் 7,500 SHG உறுப்பினர்களுக்கு ₹25 கோடி மற்றும் 75 FPO'களுக்கு ₹4.13 கோடி நிதியாக வழங்கினார். இந்த SHG'கள் தீனதயாள் அந்தியோதயா யோஜனா–தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (DAY–NRLM) ஊக்குவிக்கப்படுகின்றன.

---

**7.** மத்திய & மாநில அரசுகள் மற்றும் தனியார் துறை பிரிவுகளின் துறைசார்ந்த நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் எத்தனை பணியாளர்களுக்கு பிரதம அமைச்சரின் ஷ்ராம் விருதுகள் வழங்கப்படும்?




அ) 67

ஆ) 75

இ) 59

**ஈ) 69 ☑**

✓ 2021 ஆக.12 அன்று, இந்திய அரசு, 2018ஆம் ஆண்டிற்கான பிரதமரின் ஷ்ராம் விருதுகளை அறிவித்தது. இந்த விருதுகள் மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் தனியார் துறைகளின் துறைசார்ந்த மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் 69 தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அவர்களின் தனித்துவமான செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

✓ இந்த ஆண்டு (2021) பிரதமரின் ஷ்ராம் விருதுகள் மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகின்றன. அவை, ஷ்ராம் பூஷன் விருதுகள் (₹1,00,000/– ரொக்கப் பரிசு), ஷ்ராம் வீர்/ஷ்ராம் வீராங்கனா விருதுகள் (₹60,000/– ரொக்கப் பரிசு) மற்றும் ஷ்ராம் ஸ்ரீ/ஷ்ராம் தேவிவிருதுகள் (₹40,000/– ரொக்கப் பரிசு) ஆகும்.

---

**8.** 2021 CONCACAF தங்கக்கோப்பையை வென்ற அணி எது?

**அ) அமெரிக்கா ☑**

ஆ) மெக்ஸிகோ

இ) கோஸ்ட்டா ரிக்கா

ஈ) கத்தார்

✓ US ஆடவர் தேசிய அணியானது இறுதிப்போட்டியில் மெக்ஸிகோவை தோற்கடித்து 16ஆவது CONCACAF தங்கக்கோப்பையை வென்றது. இறுதிப்போட்டி, அமெரிக்காவின் நெவாடாவின் லாஸ் வேகாஸில் உள்ள அலெஜியண்ட் அரங்கில் நடந்தது. இந்தக் கோப்பை, அமெரிக்கா வென்ற 7ஆவது தங்கக்கோப்பையாகும். ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டி, CONCACAF'ஆல் நடத்தப்படுகிறது.

**9. ஆகஸ்ட் மாதத்தின் எந்தத் தேதி, உலக சிங்கங்கள் நாளாக கொண்டாடப்படுகிறது?**

**அ) ஆகஸ்ட் 09 ☑**

ஆ) ஆகஸ்ட் 10

இ) ஆகஸ்ட் 11

ஈ) ஆகஸ்ட் 12



- ✓ சிங்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆக.10 அன்று உலக சிங்கங்கள் நாள் கொண்டாடப்படுகிறது. சிங்கத்தின் பாதுகாப்பிற்கான ஆதரவை திரட்டவும் இந்த நாள் முயற்சி செய்கிறது. விலங்குகளுக்கான உலகளாவிய நிதியத்தின்படி (WWF), சிங்கங்கள், புல்வெளிகள் மற்றும் சமவெளிகளில் மட்டுமே வாழ்கிறது.
- ✓ சசன்–கிர் தேசியப்பூங்காவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் கம்பீரமான ஆசிய சிங்கத்தின் தாயகம் இந்தியா ஆகும். WWF'இன் கூற்றுப்படி, சிங்கங்கள் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் காணப்பட்டன. ஆனால் சமீப காலமாக, அவற்றின் எண்ணிக்கை இந்தக் கண்டங்களில் குறைந்து வருகிறது. சிங்கங்களைப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்பு, 2013'இல் தொடங்கப்பட்டது. முதல் உலக சிங்கங்கள் நாள் 2013'இல் அனுசரிக்கப்பட்டது.

---

**10. எஞ்சிய ஆசிய சிங்கங்கள் காணப்படுகிற தேசியப்பூங்கா எது?**

அ) துத்வா தேசியப்பூங்கா

ஆ) கசிரங்கா தேசியப்பூங்கா

**இ) கிர் தேசியப்பூங்கா ☑**

ஈ) கன்ஹா புலிகள் காப்பகம்



- ✓ எஞ்சிய ஆசிய சிங்கங்கள் குஜராத் மாநிலத்தின் கிர் தேசியப்பூங்காவில் காணப்படுகின்றன. 2020ஆம் ஆண்டில், குஜராத்தின் கிர் காடுகளில் வாழும் ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கை சுமார் 29% அதிகரித்தது. சிங்கங்கள் பரவி வாழும் பகுதியும் 36% அதிகரித்துள்ளது.
- ✓ கிர் தேசியப் பூங்கா மற்றும் வனவுயிரி சரணாலயமானது சசன்–கிர் என்றும் அழைக்கப்படுகிறது. இது, இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தலாலா கிர் அருகிலுள்ள ஒரு காடு, தேசியப்பூங்கா மற்றும் வனவிலங்கு சரணாலயமாகும். கடந்த 1965'இல் இந்தத் தேசியப்பூங்கா நிறுவப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையம்: மத்திய அரசு அமைக்கிறது**

கைத்தறி துறைக்கு பெரியளவில் ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு புதிய நடவடிக்கைகளை ஜவுளி அமைச்சகம் எடுத்து வருகிறது. இதன்படி, சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைத்தறி துறையில் வடிவமைப்பு சார்ந்த உயர்சிறப்பு நிலையை எட்டும் வகையிலும், நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு மாதிரி, பொருள் மேம்பாடு மற்றும் உருவாக்கத்துக்கான வடிவமைப்பு களஞ்சியங்களை வழங்கும் நோக்கத்திலும் சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், கண்ணூர், இந்தூர், நாகபுரி, மீரட், பாகல்பூர் மற்றும் பானிபட் ஆகிய இடங்களில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் மேலும் 10 கைத்தறி வடிவமைப்பு வள மையங்களை மத்திய தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம் (நிஃப்ட்) அமைக்கவுள்ளது.

ஜவுளி அமைச்சகத்தின் அமைப்பாக நிஃப்ட் விளங்குவதாலும், நவீன நாகரிகம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்டவற்றில் நிஃப்ட்டின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி கைத்தறி துறைக்கு பெரியளவில் சந்தை இணைப்புகளை வழங்க முடியுமென்பதாலும், இப்பணிக்காக நிஃப்ட்டை அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது.

நெசவாளர் சேவை மையங்களில் நிஃப்ட் படிப்படியாக அமைக்கவிருக்கும் கைத்தறி வடிவமைப்பு வள மையங்களின் மூலம் நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு வடிவமைப்பு மற்றும் வளங்கள் குறித்த விரிவான தகவல்கள் கிடைக்கும். தில்லி, மும்பை, ஆமதாபாத், புவனேசுவரம், குவாஹாட்டி, ஜெய்ப்பூர் மற்றும் வாரணாசியில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள எட்டாவது கைத்தறி வடிவமைப்பு வள மையத்தை தேசிய கைத்தறி தினமான கடந்த 7 –ஆம் தேதி திறந்துவைக்கப்பட்டது.

---

**2. தூத்துக்குடி வஉசி துறைமுகம் நிலக்கரி கையாள்வதில் சாதனை:**

தூத்துக்குடி வஉசி துறைமுக பொறுப்புக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வஉசி துறைமுகத்தின் கப்பல் சரக்குதளம் 9–ல் கடந்த 15.08.2021 அன்று எம்.வி. ஸ்டார் லாரா என்ற கப்பலில் இருந்து 57,090 டன் நிலக்கரியை 24 மணி நேரத்தில் கையாண்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இச்சாதனையானது இதற்கு முன்பு கடந்த 27.10.2020 அன்று கப்பல் சரக்கு தளம் 9–ல் எம்.வி. ஓசன் ட்ரீம் என்ற கப்பலில் இருந்து 24 மணி நேரத்தில் கையாளப்பட்ட அளவான 56,785 டன் நிலக்கரியை விட அதிகம்.

மார்செல் தீவு கொடியுடன் வந்துள்ள எம்.வி. ஸ்டார் லாரா என்ற பனமாக்ஸ் வகை கப்பல் 14.20 மீட்டர் மிதவை ஆழம் கொண்டது. இந்தோனேசியா நாட்டில் உள்ள முரா புரோவ் என்ற துறைமுகத்தில் இருந்து 77,675 டன் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு வஉசி துறைமுகம் வந்துள்ளது. இக்கப்பலில் வந்த 77,675 டன் நிலக்கரியும் இந்தியா கோக் & பவர் பிரைவேட் லிட் நிறுவனத்துக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. புதிய சாதனை படைக்க காரணமாக இருந்த அனைத்து ஊழியர்களுக்கும் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் தா கி ராமச்சந்திரன் பாராட்டு தெரிவித்தார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. இந்தியாவுடன் புதுவை இணைந்த நாள்: கீழூர் நினைவிடத்தில் மரியாதை**

பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்த புதுவை மாநிலம், கடந்த 1962 ஆகஸ்ட்.16 ஆம் தேதி இந்தியாவுடன் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது. முன்னதாக, புதுச்சேரி அருகே உள்ள கீழூர் பகுதியில் பொதுமக்கள் முன்னிலையில், தலைவர்கள் வாக்கெடுப்பை நடத்தி, இதற்கான முடிவை எடுத்தனர். இதையடுத்து, தாயகத்துடன் புதுவை சட்டப்பூர்வமாக இணைந்தது. இந்த நாளில், கீழூரில் வாக்கெடுப்பு நடைபெற்ற இடத்தில் புதுவை அரசு சார்பில் ஆண்டுதோறும் மரியாதை செலுத்தப்படுகிறது.

---

**4. நரிக்குறவர் மொழி உள்பட பத்து மொழிகளில் வெளியாகிறது திருக்குறள்**

நரிக்குறவர் இன மக்கள் பேசும் வாக்ரிபோலி மொழி உள்பட பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா.சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மத்திய கல்வி அமைச்சகம், திருக்குறளை இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. இந்த நிறுவனம், ஏற்கெனவே பஞ்சாபி (2012), மணிப்புரி (2012), தெலுங்கு (2014), கன்னடம் (2014), குஜராத்தி (2015) ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் தொகுப்புகளையும் மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக வரும் அக்டோபர் மாதம் மலையாளம், மராத்தி, ஒடியா, ஹிந்தி, நேபாளி, உருது, அரபி, பாரசீகம், வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி), படுகு ஆகிய பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளன. இது தவிர மொழிபெயர்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், குறுந்திட்ட ஆய்வுகள் மூலமாகவும் வரப் பெற்றுள்ள ஆய்வுகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலம் நூலாக்கம் பெற்று வருகின்றன. அந்த வகையில் உ.வே.சாமிநாதையர் நாட்குறிப்பு, உ.வே.சாமிநாதையர் அருஞ்சொல் அகராதியும் சங்கநூற் சொல்லடைவும், நற்றிணை (கன்னட மொழிபெயர்ப்பு), தொல்காப்பியம் (ஹிந்தி மொழிபெயர்ப்பு), பதிற்றுப்பத்து (கன்னட மொழிபெயர்ப்பு) ஆகியவை உள்ளிட்ட 20 நூல்கள் செப்டம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளன என அதில் தெரிவித்துள்ளார்.

---

**1.** **தேசிய கல்விக்கொள்கை–2020'ஐ அமல்படுத்திய நாட்டின் முதல் மாநிலம் எது?**

அ) உத்தர பிரதேசம்

**ஆ) கர்நாடகா ☑**

இ) குஜராத்

ஈ) மத்திய பிரதேசம்

✓ தேசிய கல்விக்கொள்கை–2020'இன் அமலாக்கம் தொடர்பாக உத்தரவு பிறப்பித்த நாட்டின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது என்று மாநில உயர்கல்வி அமைச்சர் CN அஸ்வத் நாராயண் கூறினார். நடப்பு கல்வியாண்டு 2021-2022 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், தேசிய கல்விக்கொள்கை–2020 அமல்படுத்துவது குறித்து கர்நாடக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

---

**2.** **செயற்கை நுண்ணறிவின்மூலமான கண்டுபிடிப்பு ஒன்றுக்கு காப்புரிமை வழங்கிய உலகின் முதல் நாடு எது?**

**அ) தென்னாப்பிரிக்கா ☑**



ஆ) இங்கிலாந்து

இ) ஆஸ்திரேலியா

ஈ) சுவீடன்

✓ செயற்கை நுண்ணறிவின் (AI) மூலம் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புக்கு காப்புரிமை வழங்கிய உலகின் முதல் நாடாக தென்னாப்பிரிக்கா மாறி உள்ளது. பிராக்டல் வடிவவியலை அடிப்படையாகக் கொண்ட உணவு கொள்கலன் அமைப்புக்கு அந்நாடு காப்புரிமை வழங்கியுள்ளது. DABUS (Device for Autonomous Bootstrapping of Unified Sentience) எனப்படும் AI அமைப்பால் அவ்வமைப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

✓ இந்த DABUS'ஐ ஸ்டீபன் தாலர் என்பவர் உருவாக்கியுள்ளார். இது சிக்கலான செயல்பாடுகளைச் செய்யக்கூடியது என்பதால் படைப்பாற்றல் எந்திரங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. கெட்டுப்போன உணவுகள் குறித்த எச்சரிக்கைகள், அவசர எச்சரிக்கை அமைப்பு போன்றவை DABUS'இன் முக்கிய செயல்பாடுகளாகும்.

---

**3.** **உஜ்வாலா 2.0 திட்டத்தை, பிரதமர் மோடி, எம்மாநிலத்திலிருந்து தொடங்கினார்?**

அ) இராஜஸ்தான்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) அஸ்ஸாம்

✓ உத்தர பிரதேசத்தின் மகோபாவில் சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்கி, உஜ்வாலா 2.0 (பிரதமரின் உஜ்வாலா திட்டம்) திட்டத்தை பிரதமர் மோடி காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கிவைத்தார்.

✓ முன்னெப்போதும் இல்லாத எண்ணிக்கையிலான மக்களின், குறிப்பாக பெண்களின் வாழ்வை உஜ்வாலா திட்டம் ஒளிமயமாக்கியுள்ளதாக பிரதமர் கூறினார். சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடியான மங்கள் பாண்டேவின் சொந்த ஊரான உத்தர பிரதேசத்தின் பாலியாவிலிருந்து கடந்த 2016ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

---

**4.** **வேளாண் தானியங்கி வானிலை நிலையங்களை நிறுவிய நிறுவனம் எது?**

**அ) இந்திய வானிலை மையம் ☑**

ஆ) DRDO

இ) CSIR

ஈ) NDMA

✓ நாட்டு மக்களுக்கு, குறிப்பாக உழவர்களுக்கு துல்லியமான வானிலை முன்னறிவிப்பை வழங்குவதற்காக இந்திய வானிலை ஆய்வு மையம் வேளாண் தானியங்கி வானிலை நிலையங்களை நிறுவியுள்ளது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலின் கீழுள்ள கிரிஷி விக்யான் மையங்களில் அமைந்துள்ள மாவட்ட அக்ரோமெட் அலகுகளில் அவை நிறுவப்பட்டுள்ளன.

---

**5.** **இராம்சார் தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 'பிந்தவாஸ்' அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) குஜராத்



ஆ) இராஜஸ்தான்

இ) ஒடிஸா

**ஈ) ஹரியானா ☑**

✓ சமீபத்தில், இந்தியாவிலிருந்து மேலும் நான்கு ஈரநிலங்கள் ராம்சார் செயலகத்திலிருந்து ராம்சார் தளங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்தளங்கள், குஜராத்தைச் சார்ந்த 'வாத்வானா' மற்றும் 'தோல்' மற்றும் ஹரியானாவைச் சார்ந்த 'சுல்தான்பூர்' மற்றும் 'பிந்தவாஸ்'. இதன்மூலம் இந்தியாவில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 46 ஆக மாறி உள்ளது. மேலும், இந்தத் தளங்களின் பரப்பளவு தற்போது 1,083,322 ஹெக்டேர் அளவுக்கு உயர்ந்துள்ளது.

✓ இந்த அங்கீகரிப்பின்மூலம் ஹரியானா மாநிலம் அதன் முதல் ராம்சார் தளத்தையும், 2012'இல் அறிவிக்கப்பட்ட நால்சரோவருக்குப்பின் குஜராத் மேலும் மூன்று ராம்சார் தளத்தையும் பெறுகிறது.

---

**6.** **எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், நடப்பாண்டின் (2021) முதலீட்டாளர் உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்படுகிறது?**

அ) மகாராஷ்டிரா

**ஆ) குஜராத் ☑**

இ) கர்நாடகா

ஈ) தில்லி

✓ முதலீட்டாளர் உச்சிமாநாடு குஜராத் அரசால் சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்படுகிறது.

✓ இம்முதலீட்டாளர் உச்சிமாநாடு, அலங்காவில் உள்ள கப்பல் உடைக்கும் தொழிலகம் வழங்கும் ஒருங்கிணைந்த ஸ்கிராப்பிங் மையத்தின் வளர்ச்சியில் கவனஞ்செலுத்தும். குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் இது நடத்தப்படுகிறது. இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு முதலீட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசு அமைச்சகங்களின் பங்கேற்பு இருக்கும். தேசிய வாகன அழிப்புக் கொள்கையானது 2021 ஆக.13 அன்று பிரதமரால் அறிவிக்கப்பட்டது.

---

**7.** **COVID தொற்றுக்கு மத்தியில் பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு உலக சுகாதார அமைப்பின் தலைமை அறிவியலாளர் உலக நாடுகளை வலியுறுத்தியுள்ளார். உலக சுகாதார அமைப்பின் தற்போதைய தலைமை அறிவியலாளர் யார்?**

அ) ககன்தீப் காங்



ஆ) மரியா வான் கெர்கோவ்

**இ) Dr சௌமியா சுவாமிநாதன் ☑**

ஈ) நார்மன் போர்லாக்

✓ உலக நலவாழ்வு அமைப்பின் தலைமை அறிவியலாளர் Dr சௌமியா சுவாமிநாதன், COVID தொற்றுநோய்க்கு மத்தியில் பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு நாடுகளை வலியுறுத்தினார்.

✓ COVID-19 மறைமுகமாக கல்வியை பெரிதும் பாதித்துள்ளது. எனவே, சரியான உடல்நலத்தை பராமரிக்கும் அதேவேளையில் பள்ளி திறப்புக்கு முன்னுரிமை அளிக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். COVID-19 தொற்றுநோய் காரணமாக, 1.5 பில்லியன் சிறார்களின் கல்வி பாதிப்பு அடைந்துள்ளது. 2021 ஜனவரி மாதத்தில், கல்வி உரிமை மன்றம் தனது அறிக்கையை வெளியிட்டது. அதில், COVID தொற்றுநோய் காரணமாக, இந்தியாவில், 10 மில்லியன் பெண்கள் இடைநிலைப்பள்ளிக்கல்வியை விட்டு வெளியேறக் கூடும் எனக் கூறப்பட்டுள்ளது.

---

**8.** **எந்த நிறுவனத்துடன் இணைந்து, அரசு மின்னணு சந்தை தளமானது தேசிய பொது கொள்முதல் மாநாட்டின் 5ஆவது பதிப்பை ஏற்பாடு செய்துள்ளது?**

அ) இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை கூட்டமைப்பு

ஆ) ASSOCHAM

இ) NASSCOM

**ஈ) இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு ☑**

- ✓ அரசு மின்னணு சந்தை தளம், இந்திய தொழிற்துறை கூட்டமைப்புடன் இணைந்து தேசிய பொது கொள்முதல் கூட்டத்தின் ஐந்தாவது பதிப்பை ஆக.9 மற்றும் 10 ஆகிய தேதிகளில், "தொழில்நுட்பத்துடன் கூடிய அரசு கொள்முதல்–தரம், வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை நோக்கி" என்ற கருப்பொருளில் நடைபெற்றது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல், ஆக.9 அன்று காணொலி வாயிலாக இந்தக் கூட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

---

**9.** நடப்பாண்டில் (2021) 7 TRIFED வான் தன் விருதுகளை வென்ற மாநிலம் எது?

அ) அருணாச்சல பிரதேசம்

**ஆ) நாகாலாந்து ☑**

இ) சிக்கிம்

ஈ) இமாச்சல பிரதேசம்

- ✓ பல்வேறு பிரிவுகளில் முன்மாதிரியான செயல்திறனுக்காக வான் தன் விகாஸ் யோஜனா (VDVY) மற்றும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) திட்டங்களில் ஏழு மதிப்புமிக்க தேசிய விருதுகளை நாகாலாந்து மாநிலம் வென்றுள்ளது.
- ✓ VDVY மற்றும் MSP'க்கான சிறு வன உற்பத்திப்பொருட்கள் திட்டமானது விவசாயிகளின் தொழில்முனைவுத் திட்டங்களில் உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களின் செயலாக்கம், கட்டுதல், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் கவனஞ்செலுத்துகிறது என அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த ஆய்வு, சிறந்த பயிற்சி மற்றும் அதிக எண்ணிக்கையிலான வான் தன் விகாஸ் கொத்துகளை நிறுவியது ஆகிய மூன்று பிரிவுகளில் நாகாலாந்து முதலிடத்தில் உள்ளது.

---

**10.** ஸ்கைட்ராக்ஸ் உலக வானூர்தி நிலைய விருதுகள் – 2021'இல், உலகின் முதல் 50 சிறந்த வானூர்தி நிலையங்களுள் ஒன்றென இடம்பெற்றுள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?

அ) சத்ரபதி சிவாஜி மகாராஜா சர்வதேச விமான நிலையம், மும்பை

**ஆ) இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், தில்லி ☑**

இ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் விமான நிலையம், கொல்கத்தா

ஈ) இராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம், ஹைதராபாத்

- ✓ நடப்பாண்டின் (2021) ஸ்கைட்ராக்ஸ் உலக வானூர்தி நிலைய விருது தரவரிசை சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதில் தில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், 2021'இல் உலகின் சிறந்த 50 விமான நிலையங்களில் ஒன்றென இடம்பெற்றுள்ளது. தில்லி விமான நிலையமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியாவின் சிறந்த விமான நிலையமாக இடம்பெறுகிறது. மும்பை, ஹைதராபாத் மற்றும் பெங்களூரு ஆகியவை உலகின் 100 சிறந்த விமான நிலையங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளன.
- ✓ ஸ்கைட்ராக்ஸ்–2021 உலக விமான நிலையத்தின் விருது பட்டியலில், தில்லி, 45ஆவது இடத்தில் உள்ளது. 2020ஆம் ஆண்டில் 50ஆவது இடத்தில் அது இருந்தது. இந்த நிலையை அடைந்த முதல் இந்திய விமான நிலையம் தில்லி விமான நிலையம் ஆகும். ஹைதராபாத், 64 ஆவது இடத்தில் உள்ளது. மும்பை, 65ஆவது இடத்தில் உள்ளது. பெங்களூரு, 71ஆவது இடத்தில் உள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சேதி தெரியுமா?**

**ஜூலை.24:** டோக்கியோ ஒலிம்பிக் 49 கிலோ பளு தூக்கும் பிரிவில் இந்தியாவின் சாய்கோம் மீராபாய் சானு இந்தியாவுக்கு முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். 2000 சிட்னி ஒலிம்பிக்கில் பளு தூக்கும் பிரிவில் கர்ணம் மல்லேஸ்வரி வெண்கலப் பதக்கம் வென்ற பிறகு இந்தியா வென்றுள்ள பதக்கம் இது.

**ஜூலை.24:** திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கும் முத்துக்கலிங்கன் கிருஷ்ணனை நியமித்து மத்தியக் கல்வி அமைச்சகம் உத்தரவிட்டது.

**ஜூலை.25:** ரஷ்யாவில் நடைபெற்ற 'சர்வதேச கணித ஒலிம்பியாட் 2021' போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 5 பதக்கங்களை இந்திய மாணவர்கள் வென்றனர். இது உலகின் பழமையான அறிவியல் போட்டி.

**ஜூலை.26:** ஹங்கேரியில் நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை பிரியா மாலிக் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

**ஜூலை.26, 29:** தெலங்கானாவில் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள 13–ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த ராமப்பா கோயில், குஜராத்தில் கட்ச் பகுதியில் உள்ள தொன்மையான ஹரப்பா நகரான தோலாவீரா ஆகியவற்றை உலகப் பாரம்பரிய சின்னங்களாக யுனெஸ்கோ அறிவித்தது.

**ஜூலை.27:** தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களைக் கவுரவிக்க 'தகைசால் தமிழர்' என்கிற புதிய விருதைத் தமிழக அரசு உருவாக்கியது. இதன் முதல் விருதுக்குச் சுதந்திரப் போராட்ட வீரரும் நூற்றாண்டு கண்ட இடதுசாரி தலைவருமான என் சங்கரய்யா தேர்வு செய்யப்பட்டார்.

**ஜூலை.27:** கல்விச் சேர்க்கையில் வன்னியர் களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபினருக்கு 7 சதவீதம், இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 2.5 சதவீதம் சிறப்பு உள் ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசாணையைத் தமிழக அரசு வெளியிட்டது.

**ஜூலை.29:** கேரளத்தில் ஆண் அரசு ஊழியர்கள் திருமணத்தின்போது உயரதிகாரிகளிடம் வரதட்சணை மறுப்புச் சான்றிதழ் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

**ஜூலை.30:** புதுக்கோட்டையில் சங்ககால பழமை வாய்ந்த பொற்பனைக்கோட்டையில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

**ஆக.1:** டோக்கியோ ஒலிம்பிக்கில் பாட்மிண்டன் மகளிர் பிரிவில் இந்தியாவின் P V சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். 2016–இல் வெள்ளிப் பதக்கம் வென்ற சிந்து, இப்போது வெண்கலம் வென்றதன் மூலம், ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தொடர்ச்சியாக இரு பதக்கங்களை வென்ற முதல் இந்திய வீராங்கனையாகியிருக்கிறார்.

---

**1.** **பன்னாட்டு இளையோர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஆகஸ்ட் 07

ஆ) ஆகஸ்ட் 08

இ) ஆகஸ்ட் 10

**ஈ) ஆகஸ்ட் 12 ☑**

✓ உலக இளையோர் நாளானது ஆக.12 அன்று கொண்டாடப்படுகிறது "Transforming Food Systems: Youth Innovation for Human and Planetary Health" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும். முதல் உலக இளையோர் நாள், 1999'இல் கொண்டாடப்பட்டது.

---

**2.** **மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற உட்கட்டமைப்பை நிறுவுவதற்கான கையேட்டை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?**

அ) தேசிய வளர்ச்சிக் கழகம்

**ஆ) NITI ஆயோக் ☑**

இ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ) சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்

✓ மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற (charging) உட்கட்டமைப்பை நிறுவுவதற்கான கொள்கைகள் மற்றும் விதிமுறைகளை வகுப்பதில் மாநில அரசுகள் & உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிகாட்டுவதற்கான கையேடு ஒன்றை NITI ஆயோக் வெளியிட்டது. மின்னேற்ற உட் கட்டமைப்பை மேம்படுத்தி மின்சார போக்குவரத்திற்கு நாடு வேகமாக மாறுவதற்கு உதவுவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும்.

✓ NITI ஆயோக், மின் அமைச்சகம், மின்சார சிக்கனத்திற்கான அலுவலகம் மற்றும் உலக வளங்கள் நிறுவனம், இந்தியா ஆகியவை இணைந்து இக்கையேட்டை உருவாக்கியுள்ளன.

---

**3.** **தேசிய மருந்து விலையிடல் ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**அ) கமலேஷ் குமார் பந்த் ☑**



ஆ) சுப்ரா சிங்

இ) Dr ராகேஷ் சர்வால்

ஈ) Dr K ராஜேஸ்வர ராவ்

✓ கமலேஷ் குமார் பந்த் இ ஆ ப, மத்திய அமைச்சரவையின் நியமனக் குழுவால் தேசிய மருந்து விலையிடல் ஆணையத்தின் (NPPA) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்திற்கு முன்பு இமாச்சல பிரதேச அரசாங்கத்தின் முதன்மைச் செயலாளர் (வருவாய்) & இமாச்சல பிரதேசத்தில் நிதி ஆணையர் (மேல்முறையீடு) & இமாச்சல பிரதேச மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத் தலைவராக பந்த் பணிபுரிந்துள்ளார்.

---

**4.** **செயற்கைக்கோள் தொலைபேசி வசதிகொண்ட இந்தியாவின் முதல் தேசியப்பூங்கா எது?**

**அ) கசிரங்கா தேசியப்பூங்கா ☑**



ஆ) கிர் தேசியப்பூங்கா

இ) ஆனைமுடி சோலை தேசியப்பூங்கா

ஈ) அன்வி தேசியப்பூங்கா

✓ கசிரங்கா தேசியப்பூங்காவானது செயற்கைக்கோள் தொலைபேசிகள் வசதிகொண்ட இந்தியாவின் முதல் தேசியப்பூங்காவாக மாறியுள்ளது. இச்செயற்கைக்கோள் தொலைபேசிகள் மொபைல் இணைப்புகளற்ற (அ) மோசமான சிக்னலுள்ள பூங்காவின் 6 சரகங்களில் பயன்படுத்தப்படும். பாரத் சஞ்சார் நிகம் லிட் வழங்கும் சேவைக்கான மாதாந்திர செலவை அந்தப் பூங்காவின் அதிகாரிகள் ஏற்றுக்கொள்வார்கள்.

---

**5.** **உலக யானைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஆகஸ்ட் 10



**ஆ) ஆகஸ்ட் 12 ☑**

இ) ஆகஸ்ட் 14

ஈ) ஆகஸ்ட் 16

✓ உலக யானைகள் நாளானது ஆக.12 அன்று கடைபிடிக்கப்படுகிறது. யானைகள் பாதுகாப்பில் இந்நாள் கவனம் செலுத்துகிறது.

✓ யானைகளுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குதல், தந்த வர்த்தகத்தை தடுப்பது, அமலாக்க கொள்கைகளை மேம்படுத்துதல், யானைகளின் வாழ்விடத்தை பாதுகாத்தல், சட்டத்துக்குப் புறம்பான வேட்டையைத் தடுத்தல், சிறைபிடிக்கப்பட்ட யானைகளை அவற்றின் இயற்கை வாழ்வு இடங்களில் கொண்டுவிடுதல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வதை உலக யானைகள் நாள் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**6.** **எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், உலகின் இரண்டாவது மிகப்பெரிய புதுப்பிக்கப்பட்ட அதிநவீன தேசிய மரபணு வங்கியை நரேந்திர சிங் தோமர் திறந்து வைத்தார்?**

**அ) புது தில்லி ☑**



ஆ) உத்தர பிரதேசம்

இ) குஜராத்

ஈ) கோவா

✓ புது தில்லியில் உள்ள பூசாவில் உள்ள தேசிய தாவர மரபணு வளங்கள் பணியகத்தில் உலகின் இரண்டாவது பெரிய புதுப்பிக்கப்பட்ட அதிநவீன தேசிய மரபணு வங்கியை மத்திய உழவு & உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் திறந்துவைத்தார்.

✓ உயிரி வலுவூட்டப்பட்ட பயிர் வகைகளின் தேவையை உணர்ந்த அரசு அதனை சமாளிக்க முயற்சிக்கிறது. தாவர மரபணு வளங்களின் (PGR) விதைகளை வருங்கால சந்ததியினருக்குப் பாதுகாப்பதற்காக 1996ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய மரபணு வங்கி, விதைகளின் வடிவில் சுமார் ஒரு மில்லியன் ஜெர்ம்பிளாஸத்தை பாதுகாக்கும் திறன்கொண்டதாகும். தற்போது 2.7 லட்சம் இந்திய ஜெர்ம்ப்ளாசம் உள்ளது (மொத்தம் 4.52 லட்சம் ஜெர்ம்ப்ளாசங்கள் உள்ளன).

---

**7.** **உலக தடகள தரவரிசையில் நீரஜ் சோப்ராவின் தரநிலை என்ன?**

அ) 01



**ஆ) 02 ☑**

இ) 03

ஈ) 04

✓ 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் பெற்று, உலக தடகள தரவரிசையில் ஈட்டியெறி வீரர் நீரஜ் சோப்ரா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். நீரஜ் சோப்ரா, 1315 மதிப்பெண்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். முதலிடத்தில் 1396 மதிப்பெண்கள் பெற்ற ஜெர்மன் தடகள வீரர் ஜோஹன்னஸ் வெட்டர் உள்ளார்.

---

**8.** **ஐந்து தனித்துவமான ஆப்பிள்களை பஹ்ரைனுக்கு ஏற்றுமதி செய்வதற்காக எந்த மாநிலத்துடன் APEDA ஒத்துழைத்துள்ளது?**

அ) ஜம்மு & காஷ்மீர்



**ஆ) இமாச்சல பிரதேசம் ☑**

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை புதிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் தனது முயற்சிகளின் தொடர்ச்சியாக, 5 பிரத்தியேக வகை ஆப்பிள்களை இமாச்சல பிரதேச தோட்டக்கலை பொருட்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் பதப்படுத்துதல் நிறுவனத்துடன் (HPMC) இணைந்து பஹ்ரைனுக்கு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மற்றும் மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஏற்றுமதி செய்துள்ளது.

✓ இராயல் டெலிசியஸ், டார்க் பிரௌன் காலா, ஸ்கார்லெட் ஸ்பர், ரெட் வெலோக்ஸ் மற்றும் கோல்டன் டெலிசியஸ் ஆகிய இந்த வகைகள், இமாச்சல பிரதேசத்திலுள்ள விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு APEDA'இல் பதிவுபெற்ற DM என்டர்பிரைசஸ் நிறுவனத்தால் ஏற்றுமதி செய்யப்பட்டது.

---

**9.** மாணிக் என்ற புதிய டர்போ..ஃபேன் எஞ்சினுடனான குரூஸ் ஏவுகணையை சோதனை செய்த நாடு எது?



**அ) இந்தியா ☑**

ஆ) இஸ்ரேல்

இ) ஜெர்மனி

ஈ) ஜப்பான்

✓ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'மாணிக்' டர்போஃபேன் எஞ்சின்மூலம் இயக்கப்படும் 'நிர்பை' என்ற உள்நாட்டு தொழில்நுட்ப குரூஸ் ஏவுகணையை ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக சோதித்துள்ளது. இந்த ஏவுகணையை பெங்களூருவில் உள்ள DRDO ஆய்வகமான ஏரோநாட்டிக்கல் டெவலப்மென்ட் எஸ்டாப்லிஷ்மென்ட் வடிவமைத்துள்ளது. இந்த இயந்திரம் மற்றொரு DRDO ஆய்வகமான பெங்களூருவில் அமைந்துள்ள கேஸ் டர்பைன் ஆராய்ச்சி நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

✓ 1000 கிலோமீட்டர் தொலைவு சென்று தாக்கும் திறன்கொண்ட 'நிர்பை' சப்ஸானிக் ஏவுகணை, ஒடிசா கடற்கரையில் உள்ள ராணுவ சோதனை மையத்தில் இருந்து ஏவப்பட்டது; அது, 15 நிமிடங்களில் சுமார் 150 கிலோமீட்டரை கடந்துசென்றது.

---

**10.** உலக இடதுகை பழக்கமுள்ளவர்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?




அ) ஆகஸ்ட் 12

**ஆ) ஆகஸ்ட் 13 ☑**

இ) ஆகஸ்ட் 14

ஈ) ஆகஸ்ட் 15

✓ உலக இடதுகை பழக்கமுள்ளவர்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஆக.13 அன்று கொண்டாடப்படுகிறது. பெரும்பான்மையான மக்களைப் போலல்லாமல், இடதுகை பழக்கத்துடன் பிறந்தோரை அங்கீகரிக்கும் விதமாக இந்நாள் உள்ளது. உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 10–12 சதவீதத்தினர், இடதுகை பழக்கமுடையோராக உள்ளனர். இடதுகை பழக்கமுடையோரைக் கண்டு அஞ்சும் மக்களும் உள்ளனர். இந்நிலை சினிஸ்ட்ரோபோபியா (Sinistrophobia) என்று அழைக்கப்படுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

### 1. தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு: வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

தமிழகத்தில் செப். 1 முதல் பள்ளிகள் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பின்பற்றப்பட வேண்டிய கரோனா வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக மருத்துவத்துறை வெளியிட்டுள்ளது. கரோனா தொற்று காரணமாக 2020 மார்ச் மாதம் முதல் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன.

இந்நிலையில், கரோனா தொற்று குறைந்து வரும் நிலையில் மீண்டும் பள்ளிகள் திறப்பது குறித்து பள்ளிக்கல்வித்துறை பல்வேறு தரப்பினரிடையே ஆலோசனை மேற்கொண்டது. அதன் அடிப்படையில் செப்.1ஆம் தேதி 9 முதல் 12 வகுப்பு வரை 50 சதவீத மாணவர்களுடன் பள்ளிகளை திறக்க உத்தேச தேதியை தமிழக அரசு அறிவித்திருந்தது. இந்நிலையில், பள்ளிகள் திறக்கப்பட்டால் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை மாநில மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத்துறை இன்று வெளியிட்டுள்ளது.

அனைத்து பள்ளிகளிலும் கிருமி நாசினி மற்றும் கைகழுவ தண்ணீர் உள்ளிட்டவை ஏற்பாடு செய்திருக்க வேண்டும்

கரோனா அறிகுறி உள்ள மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் பள்ளிக்கு வர அனுமதிக்க கூடாது

மாணவர்களுக்கு சத்து மாத்திரை மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையானவை வழங்க வேண்டும்

கரோனா தடுப்பூசி செலுத்த தகுதியான மாணவர்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்

ஒரே நேரத்தில் 50 சதவீத மாணவர்கள் மட்டுமே அனுமதிக்க வேண்டும்

பள்ளி வளாகத்தை சுத்தமாக வைத்திருப்பதை பள்ளி நிர்வாகம் அல்லது உள்ளாட்சி நிர்வாகம் உறுதி செய்யவேண்டும்

பள்ளிகளில் உள்ள மேஜைகள், கேண்டீன், கழிவறைகள், அனைத்து வகுப்பறைகள், நூலகம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்திருக்க வேண்டும்

பள்ளி வாகனங்களை கிளம்புவதற்கு முன்பாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்

பள்ளிகளில் ஒவ்வொரு இருக்கைக்கும் நடுவே குறைந்தது 6 அடி இடைவெளி இருக்க வேண்டும்

ஆசிரியர்கள் அறை, அலுவலகம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்

பள்ளியின் கழிவறைக்கு வெளியே, கைக்கழுவுமிடம் உள்ளிட்ட பகுதிகளில் சமூக இடைவெளியை பின்பற்றி வட்டம் போடப்பட்டிருக்க வேண்டும்

பள்ளிகளில் விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகள் நடத்துவதை தவிர்க்க வேண்டும் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பள்ளிகளுக்கு வர அனுமதி இல்லை

---

### 2. பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.11,040 கோடியில் தேசிய திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

உள்நாட்டில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.11,040 கோடி மதிப்பிலான தேசிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை, மத்திய அமைச்சர்கள் அனுராக் தாக்குர், நரேந்திர சிங் தோமர் ஆகியோர் செய்தியாளர்களிடம் விவரித்தனர். அப்போது அனுராக் கூறியதாவது:

அடுத்த 5 ஆண்டுகளில் பாமாயில் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் வெளிநாடுகளில் இருந்து அதை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும் தேசிய அளவிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.11,040 கோடி செலவில் அந்தமான் நிகோபார் தீவுகளிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அதில் மத்திய அரசின் பங்களிப்பாக ரூ.8,844 கோடியும், மாநில அரசுகளின் பங்களிப்பாக ரூ.2,196 கோடியும் செலவிடப்படும். மத்திய அரசின் 'தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம்– பாமாயில் உற்பத்தி' என்ற திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றார் அவர்.

மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது: நாடு முழுவதும் தற்சமயம், 3.70 லட்சம் ஹெக்டேரில் பாமாயில் சாகுபடி செய்யப்படுகிறது. வரும் 2025–26–ஆம் ஆண்டுக்குள் மேலும் 6.5 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் பாமாயில் சாகுபடி பரப்பு 10 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும். இதன் மூலம், வரும் 2025–26–ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு பாமாயில் உற்பத்தி 11.20 லட்சம் டன்னாகவும், 2029–30–ஆம் ஆண்டுக்குள் 28 லட்சம் டன்னாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாமாயில் சாகுபடியில் எண்ணெய் வித்துகள் வளா்த்து, லாபம் கிடைப்பதற்கு 5 முதல் 7 ஆண்டுகள் வரை ஆகும். அவ்வளவு காலம் சிறு விவசாயிகளால் காத்திருக்க முடியாது. மேலும், பாமாயில் வித்துகள் உற்பத்தியில் விவசாயிகள் வெற்றி பெற்றிருந்தாலும், அவா்களுக்கு உரிய விலை கிடைப்பதில் நிச்சயமின்மை நிலவி வந்தது.

வடகிழக்கு மாநிலங்களில் பாமாயில் சாகுபடி செய்வதற்கு உகந்த சூழல் உள்ளது. ஆனால், எண்ணெய் உற்பத்திக்கான தொழிற்சாலைகள் இல்லாததால் பாமாயில் சாகுபடி நடைபெறவில்லை. இவற்றைக் கருத்தில்கொண்டு பாமாயில் உற்பத்தியை ஊக்குவிக்க, அதனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய பாமாயில் உற்பத்தித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதேபோன்று விவசாயிகளுக்கு முதல்முறையாக விலை உத்தரவாதமும் அளிக்கப்படவுள்ளது என்றார் அவர்.

வேளாண் சந்தைப்படுத்துதல் நிறுவனத்தை வலுப்படுத்த ரூ.77.45 கோடி: வடகிழக்கு பிராந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் நிறுவனத்தை ரூ.77.45 கோடியில் வலுப்படுத்தும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் கூறியதாவது: பொதுத் துறை நிறுவனமான வடகிழக்கு பிராந்திய வேளாண் சந்தைப்படுத்துதல் நிறுவனம், வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது. அந்த நிறுவனத்தை ரூ.77.45 கோடியில் வலுப்படுத்த பிரதமர் மோடி தலைமையிலான

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் சிறந்த சாகுபடி முறைகள், விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை உர பயன்பாட்டை ஊக்குவித்தல், அறுவடைக்குப் பிந்தைய பணிகள் போன்ற புதுமையான திட்டங்களை அந்த நிறுவனம் அமல்படுத்துவதற்கு இந்த நிதியுதவி உதவிகரமாக இருக்கும். இதன்மூலம், வடகிழக்கு மாநில விவசாயிகளின் விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பது உறுதிசெய்யப்படும். மேலும், உற்பத்திப்பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதன்மூலம் வடகிழக்கு விவசாயிகளின் விளைபொருள்களை சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்ய ஊக்கப்படுத்த முடியும். நிறுவனத்தின் வருவாய் அதிகரித்து செலவுகளும் குறையும். நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 33,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றார் அவர்.

**புவியியல் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு:**

புவியியல் ஆராய்ச்சியில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய புவியியல் ஆய்வு மையம், அமெரிக்காவின் புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அதிகாரிகள் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**இந்தியா–ஸ்விட்சர்லாந்து இடையே ஒப்பந்தம்:**

மருத்துவ ஆராய்ச்சியில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், ஸ்விட்சர்லாந்தின் எதிர் நுண்ணுயிர்த் தடுப்பு ஆராய்ச்சி அமைப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதேபோல், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் ஸ்விட்சர்லாந்தின் பவுண்டேஷன் பார் இன்னோவேட்டிவ் நியூ டயக்னாஸ்டிக்ஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

**3. தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா– வியத்நாம் கடற்படை பயிற்சி**

தென்சீனக் கடல் பகுதியில் இந்தியா–வியத்நாம் கடற்படைகள் கூட்டாக போர் பயிற்சியில் ஈடுபட்டன. பல்வேறு வளங்களைக் கொண்டுள்ள தென்சீனக்கடல்பகுதியையொட்டி வியத்நாம், பிலிப்பின்ஸ், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உள்ளன. அங்கு பிற நாடுகளைப் பின்தள்ளிவிட்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட சீனா முயன்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில் வியத்நாமுடன் இணைந்து இந்தியா அப்பகுதியில் கூட்டுப் பயிற்சி நடத்தியுள்ளது.

இப்பயிற்சிக்கு சீனா ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இந்திய கடற்படையின் ரன்விஜய் ஏவுகணை போர்க்கப்பல், ஐஎன்எஸ் கோரா ஆகியவை இப்பயிற்சியில் பங்கேற்றன.

வியத்நாமை ஒட்டியுள்ள தென்சீனக் கடல் பகுதியில் எண்ணெய் துரப்பணப் பணிகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. எனவே, தென்சீனக்கடல் உரிமை தொடர்பான பிரச்னையில் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது. எனவே, இந்தக் கடற்படைப் பயிற்சி கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தென்சீனக்கடலில் பெரிய அளவில் ஹைட்ரோகார்பன் உள்ளிட்ட வளங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, அக்கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது. அதே நேரத்தில் தென்சீனக்கடலில் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ள வியத்நாம், பிலிப்பின்ஸ், புருனே உள்ளிட்ட நாடுகளும் அக்கடல் பகுதியில் தங்கள் உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

---

**4. இந்தியாவில் முதல்முறையாக வியத்நாம் துணைத் தூதரகம்**

இந்தியாவில் முதல்முறையாக வியத்நாம் துணைத் தூதரகம் பெங்களூரில் திறக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பெங்களூரில் புதன்கிழமை வியத்நாம் நாட்டுக்கான இந்திய தூதர் பான் சன் செள செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரில் திறக்கப்பட்டுள்ள வியத்நாம் துணைத் தூதரகத்தின் கௌரவ துணைத் தூதராக என் எஸ் சீனிவாஸ் மூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

வியத்நாம் மற்றும் இந்தியாவுக்கு இடையே முதலீடுகளை மேம்படுத்துவதற்காகவே துணைத் தூதரகம் திறக்கப்பட்டுள்ளது. வியத்நாமின் 80 சதவீத மக்கள் பெப்த்த மதத்தை பின்பற்றி வருவதால், இந்தியாவுக்கும் வியத்நாமுக்கும் இடையே வரலாற்று ரீதியான தொடர்பு உள்ளது.

வியத்நாமின் 26ஆவது முதலீட்டு பங்குதாரராக இந்தியா உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான தொழில் முதலீட்டு உறவை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். மருந்து, ஆட்டோமொபைல் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடு செய்ய வியத்நாம் சிறந்த நாடாகும். அந்நாட்டில் முதலீடு செய்வதற்கான எல்லா வாய்ப்புகளும் பெங்களூரில் உள்ளன என்றார்.

---

**5. ஜூனியர் மல்யுத்தம்: இந்தியாவுக்கு 6 பதக்கங்கள்**

ரஷியாவில் நடைபெற்ற உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவில் இந்தியாவுக்கு ஒரு வெள்ளி, 5 வெண்கலம் என 6 பதக்கங்கள் கிடைத்துள்ளன. ஆடவருக்கான 61 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் ரவீந்தர் 3–9 என்ற கணக்கில் ஈரான் வீரர் ரஹ்மான் மௌசா அமௌசத்காலிலியிடம் வீழ்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஆடவருக்கான பிளே ஆஃப் சுற்றில் 74 கிலோ பிரிவில் இந்தியாவின் யாஷ் 12–6 என்ற கணக்கில் கிர்ஜிஸ்தானின் ஸ்டாம்புல் ஜானிபெக்கை வென்றார். 92 கிலோ பிரிவில் பிருத்வி பாபாசாஹேப் பாட்டீல் 2–1 என்ற கணக்கில் ரஷியாவின் இவான் கிரிலோவை வீழ்த்தி வெண்கலம் வென்றார். 125 கிலோ பிரிவில் அனிருத் 7–2 என்ற கணக்கில் அஜர்பைஜானின் அய்தின் அஹமதோவை வென்றார். இவர்களுக்கு முன் கௌரவ் பல்யான் (79 கிலோ), தீபக் (97 கிலோ) ஆகியோரும் வெண்கலப் பதக்கம் வென்றிருந்தனர்.

மகளிருக்கான 76 கிலோ பிரிவில் இந்தியாவின் பிபாஷா அதிரடியாக 6–3 என்ற கணக்கில் கஜகஸ்தானின் தில்நாஸ் முல்கினோவாவையும், 9–4 என்ற கணக்கில் மங்கோலியாவின் ஆட்பாக் அல்ஸிபாட்டையும் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். 50 கிலோ பிரிவில் இந்தியாவின் சிம்ரன் அரையிறுதியில் அமெரிக்காவின் எமிலி கிங் ஷில்சனிடம் தோல்வி கண்டார். இதர இந்திய போட்டியாளர்களான சிதோ (55 கிலோ), குசும் (59 கிலோ), அர்ஜு (68 கிலோ) ஆகியோர் தங்களது காலிறுதிச்சுற்றுகளில் தோற்று வெளியேறினர்.

---

**6. யு–20 உலக தடகள சாம்பியன்ஷிப்: இந்திய கலப்பு ரிலே அணிக்கு வெண்கலம்**

கென்யாவில் நடைபெறும் 20 வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–20) உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 4*400 மீட்டர் ரிலேவில் இந்திய கலப்பு அணி வெண்கலப் பதக்கம் வென்றது. இப்பிரிவின் தகுதிச்சுற்றில் இந்தியாவின் பரத் ஸ்ரீதர், பிரியா மோகன், சம்மி, கபில் ஆகியோர் அடங்கிய அணி 3 நிமிஷம் 23.3 விநாடிகளில் இலக்கை எட்டி 2–ஆவது அணியாக இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தது. பின்னர் இறுதிச்சுற்றில் 3 நிமிஷம் 20.60 விநாடிகளில் இலக்கை எட்டி 3–ஆம் இடம் பிடித்தது அதே இந்திய அணி. நைஜீரியா அணி 3 நிமிஷம் 19. 70 விநாடிகளில் வந்து தங்கமும், போலந்து அணி 3 நிமிஷம் 19.80 விநாடிகளில் வந்து வெள்ளியும் வென்றன.

இந்தப் போட்டியின் வரலாற்றில் இந்தியா வென்ற 5–ஆவது பதக்கம் இதுவாகும். இதற்கு முன் 2002–இல் வட்டு எறிதல் வீராங்கனை சீமா அன்டில் வெண்கலமும், 2014–இல் வட்டு எறிதல் வீராங்கனை நவ்ஜீத் கௌர் தில்லான் வெண்கலமும், 2016–இல் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தங்கமும், 2018–இல் ஓட்டப் பந்தய வீராங்கனை ஹிமா தாஸ் தங்கமும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**7. தமிழகம், புதுவை ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது**

தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்வான ஆசிரியர்கள் பட்டியலை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்த சர்வபள்ளி ராதாகிருஷ்ணனை போற்றும் வகையில் அவரது பிறந்த நாளான செப்டம்பர் 5–ஆம் தேதி ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

நாட்டில் ஆசிரியர் பணியில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு இந்நாளில் தேசிய நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதிலும் இருந்து 44 ஆசிரியர்களை மத்திய கல்வி அமைச்சகம் தேர்வு செய்துள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து திருச்சி மாவட்டம், பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியை கே ஆஷா தேவி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை டி லலிதா ஆகிய இருவரும் விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் ஆசிரியர் ஆஷா தேவி மாணவர்களுக்கு 10'க்கும் மேற்பட்ட தனித்திறன் பயிற்சிகள் வழங்குவது, மாணவா்கள் எண்ணிக்கையை அதிகரித்தது போன்ற பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளார். அதேபோன்று ஆராய்ச்சி சார்ந்த கல்வியை, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்றுக்கொடுக்கும் செயல்முறைகளை ஆசிரியர் லலிதா அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதேபோன்று புதுச்சேரி மணப்பட்டு அரசு நடுநிலைப்பள்ளியைச் சேர்ந்த அறிவியல் ஆசிரியர் வி ஜெயசுந்தரும் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கிராமப்புற மாணவர்களுக்கு புதுமையான முறையில் கல்வி கற்பிப்பதால் இவ்விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளார். வழக்கமாக தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் தில்லி விக்யான் பவனில் செப்.5ஆம் தேதி குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் கையால் விருது வழங்கப்படும். கடந்த ஆண்டு கரோனா தொற்றுப் பரவல் காரணமாக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடியரசுத்தலைவர் சார்பில் காணொலிக்காட்சிமூலம் விருதுகள் வழங்கப்பட்டன.

---

**8. துபை மருத்துவப் பல்கலையில் சிறப்பிடம் பெற்ற வேதாரண்யம் மாணவிக்கு 'கோல்டன்' விசா**

துபை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பார்மஸி பட்டப்படிப்பில் சிறப்பிடம் பெற்ற வேதாரண்யம் மாணவிக்கு, அந்நாட்டரசு 10 ஆண்டுகளுக்கான 'கோல்டன்' விசா வழங்கி பாராட்டியுள்ளது.

நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே உள்ள தோப்புத் துறையை சேர்ந்தவர் ஷர்மினா பேகம் பஷீர் அகமது. இவர், துபை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பார்மஸி முதுகலை பட்டம் படித்து முடித்துள்ளார். பல்கலைக்கழக அளவிலான தேர்ச்சி மதிப்பீட்டில், ஷர்மினா பேகம் பஷீர் அகமது 2ஆம் இடம்பிடித்தார். இதைத்தொடர்ந்து, அந்நாட்டு அரசின் அறிவிப்பின்படி, 10 ஆண்டுகளுக்கான 'கோல்டன்' விசா அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

**9. உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் மணிமேகலை**

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியம் உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது.

பௌத்த சமயம் உலகம் முழுவதும் பரவியிருந்தாலும், தற்போது அச்சமயத்துக்கான முழுமையான காப்பியமாக இருப்பது தமிழிலுள்ள மணிமேகலை மட்டுமே. சிலப்பதிகாரத்துக்கு அடுத்ததாக இலக்கிய அழகில் பெருமை வாய்ந்த இக்காப்பியத்தை எழுதியவர் சீத்தலைச் சாத்தனார். துறவறத்தை வலியுறுத்தும் இக்காப்பியத்தின்மூலம் 1,500 ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய பல சமூக சீர்திருத்தக் கருத்துகளை அறிந்துகொள்ளமுடிகிறது.

பசி ஒழிப்பு, மது ஒழிப்பு, குற்றச்செயல் ஒழிப்பு, சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்றுதல், சகிப்புத் தன்மை உள்ளிட்டவற்றை வலியுறுத்தும் மணிமேகலை காப்பியத்தை உலக அளவில் கொண்டு செல்ல வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இக்காப்பியத்தை உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொடங்கியுள்ளது. இதில், முதல்கட்டமாக தாய்லாந்தின் தாய், சீனம், ஜப்பானியம், கொரிய, பர்மிய, வியத்நாம், மலாய், சிங்களம், கம்போடியம், இந்தோனேஷியம், மங்கோலியம் உள்பட 18 மொழிகளில் மொழிபெயர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில், முதல் மொழியாக தாய்லாந்திலுள்ள தாய் மொழியில் மொழிபெயர்ப்பதற்கான ஆணை சமீபத்தில் வழங்கப்பட்டது. இதை தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த முனைவர் சுவித் விபுல்ஸ்ரசத் மொழிபெயர்க்கிறார்.

---

**1.** பிரிவினையின் அதிர்ச்சி ஏற்பட்டதன் நினைவு தினமாக (Partition Horrors Remembrance Day) அறிவிக்கப்பட்டுள்ள தேதி எது?



அ) ஆகஸ்ட் 10

ஆ) ஆகஸ்ட் 12

**இ) ஆகஸ்ட் 14 ☑**

ஈ) ஆகஸ்ட் 18

✓ நமது மக்களின் போராட்டங்கள் மற்றும் தியாகங்களின் நினைவாக, ஆகஸ்ட்.14ஆம் தேதி, பிரிவினையின் அதிர்ச்சி ஏற்பட்டதன் நினைவு தினமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

---

**2.** அமெரிக்க கடற்படை தலைமையிலான தென்கிழக்கு ஆசிய கூட்டுறவு & பயிற்சி (SEACAT) என்ற ராணுவப் பயிற்சியில் இந்திய கடற்படை பங்கேற்றுள்ளது. இந்தப் பயிற்சி எங்கே நடைபெற்றது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) புருனே

**இ) சிங்கப்பூர் ☑**

ஈ) திமோர்–லெஸ்டே

✓ சிங்கப்பூரில் அமெரிக்க கடற்படை தலைமையிலான தென்கிழக்கு ஆசிய கூட்டுறவு & பயிற்சி என்ற (SEACAT) இராணுவப் பயிற்சியில் இந்திய கடற்படை பங்கேற்றது. ஒன்றிணைந்து செயற்படுவதை மேம்படுத்துவது, கடல்சார் பாதுகாப்பு குறித்த சிக்கல்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் விதிகள் அடிப்படையிலான பன்னாட்டு ஒழுங்கை பராமரிப்பது இந்த SEACAT–2021'இன் முக்கிய நோக்கமாகும்.

✓ பயிற்சியில் பங்கேற்கும் மற்ற நாடுகளுள் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், புருனே, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனேசியா, ஜப்பான், மலேசியா, மாலத்தீவு, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், தென் கொரியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, திமோர்–லெஸ்டே, ஐக்கிய இராச்சியம் மற்றும் வியத்நாம் ஆகியவை அடங்கும். முதன்முதலில் கடந்த 2002ஆம் ஆண்டில் இந்த SEACAT பயிற்சி நடத்தப்பட்டது.

---

**3.** முதன்முறையாக டிரோன் தடயவியல் ஆய்வகம் & ஆராய்ச்சி மையத்தை தொடங்கியுள்ள மாநிலக் காவல்துறை எது?



அ) தமிழ்நாடு

ஆ) இராஜஸ்தான்

**இ) கேரளா ☑**

ஈ) பீகார்

✓ அதிகரித்துவரும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் கேரள மாநிலக் காவல்துறை, முதன்முறையாக, டிரோன் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை தொடங்கியுள்ளது. டிரோன்களின் அச்சுறுத்தல் அம்சங்களுக்கு தீர்வுகாண்பதோடு, ஆளில்லா வான்வழி வாகனங்களின் பயன்பாட்டுப் பகுதியையும் கண்காணிக்கும் பணியை இந்த ஆய்வகம் & ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும். கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், இந்தத் தடயவியல் ஆய்வகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை திறந்துவைத்தார்.

---

**4.** நடப்பாண்டு உலக உயிரி எரிபொருள் நாளுக்கான கருப்பொருள் என்ன?



**அ) Promotion of Biofuels for a Better Environment ☑**

ஆ) Promote Green Fuels & Save Earth

இ) End use of Fossil Fuels

ஈ) Save Green Planet

✓ வழக்கமான புதைபடிவ எரிபொருட்களுக்கு மாற்றாக புதைபடிவம் சாராத எரிபொருட்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் ஆக.10 அன்று உலக உயிரி எரிபொருள் நாள் அனுசரிக்கப்படுகிறது. உயிரி எரிபொருள் துறையில் அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகளையும் இந்நாள் சிறப்பிக்கிறது. நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Promotion of Biofuels for a Better Environment" ஆகும்.

---

**5.** உலக உடலுறுப்புதான நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




அ) ஆகஸ்ட் 10

**ஆ) ஆகஸ்ட் 13 ☑**

இ) ஆகஸ்ட் 14

ஈ) ஆகஸ்ட் 16

✓ மக்கள் தங்களின் விலைமதிப்பற்ற உடலுறுப்புகளை தானம் செய்வதை ஊக்குவிப்பதற்காக, ஆண்டுதோறும் ஆக.13 அன்று உலக உடலுறுப்பு தான நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ ஆண்டுதோறும், உடலுறுப்பு மாற்று சிகிச்சைக்காக காத்திருப்போரில் சுமார் ஐந்து இலட்சம் பேர், உடலுறுப்பு கிடைக்காத காரணத்தினால் மரணிக்கிறார்கள். உடலுறுப்பு மாற்று சிகிச்சைக்கு காத்திருப்போரின் எண்ணிக்கைக்கும், உடலுறுப்பு கிடைக்கும் எண்ணிக்கைக்கும் இடையே பெருமளவு வித்தியாசம் உள்ளது. உடலுறுப்பு தானம் என்பது நோயுற்று, உடலுறுப்பு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மற்றொருவர் அந்த உடலுறுப்பைத் தானமாக அளிப்பதாகும். இதை, ஒருவர், உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறந்தபிறகோ மேற்கொள்ளமுடியும். சிறு நீரகம், நுரையீரல், இருதயம், கண், சிறு குடல், கல்லீரல், கணையம், விழிப்படலம், தோல் திசுக்கள், எலும்புத்திசுக்கள், இதயக்குழாய்கள் மற்றும் நரம்புகள் ஆகியவற்றை ஒருவர் தானமாக வழங்கவியலும்.

---

**6.** சமீபத்தில் உலக நிழற்பட நாள் கடைப்பிடிக்கப்பட்ட தேதி எது?



அ) ஆகஸ்ட் 18

**ஆ) ஆகஸ்ட் 19 ☑**

இ) ஆகஸ்ட் 20

ஈ) ஆகஸ்ட் 21

✓ நிழற்படக்கலையையும், அதில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட்.19 அன்று உலக நிழற்பட நாள் கொண்டாடப்படுகிறது. 19ஆம் நூற்றாண்டில் லூயிஸ் டாகுவேரே என்பவர் 'டாகுரியோடைப்' என்ற நிழற்பட செயல்முறையை வடிவமைத்தார். பிரான்ஸ் அகாடமி இம்முயற்சியை 1839 ஜன.9 அன்று அறிவித்தது. அதன்பின், 1839'இல் பிரான்ஸ் நாட்டு அரசு, ஆக.19 அன்று 'டாகுரியோடைப்' செயல்பாட்டை உலக மக்கள் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தலாம் என அறிவித்தது.

✓ அந்த ஆகஸ்ட்.19ஆம் தேதிதான் உலகம் முழுவதும் நிழற்பட நாளாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. 1826'இல், பிரான்ஸ் நாட்டவரான ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவர், முதல் நிலையான நவீன நிழற்படத்தை எடுத்தார்.

---

**7.** உலக மனிதநேய நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




அ) ஆகஸ்ட் 18

**ஆ) ஆகஸ்ட் 19 ☑**

இ) ஆகஸ்ட் 20

ஈ) ஆகஸ்ட் 21

✓ உலக மனிதநேய நாள் (World Humanitarian Day) என்பது மனிதநேயப் பணியாளர்களையும், மனிதநேய காரணங்களுக்காக தம் இன்னுயிரை இழந்தவர்களையும் நினைவுகூரும் ஒரு சிறப்பு நாளாகும். 2003 ஆக.19 அன்று பாக்தாத்தில் உள்ள ஐநா தலைமையகத்தில் நிகழ்ந்த வெடி குண்டுத்தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். அதனை நினைவு கூரும் விதமாக ஆண்டுதோறும் ஆகஸ்ட்.19 அன்று உலக மனிதநேய நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

---

**8.** இந்தியாவில் சமூக நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?



**அ) ஆகஸ்ட் 20 ☑**

ஆ) ஆகஸ்ட் 18

இ) ஆகஸ்ட் 15

ஈ) ஆகஸ்ட் 14

✓ 1984 – 1989 வரை இந்தியாவின் 6ஆவது பிரதமராக பணியாற்றினார் இராஜீவ் காந்தி. 1984ஆம் ஆண்டு தனது தாயார் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாற்பதாவது வயதில் இளவயது

இந்திய பிரதமராக பதவியேற்றார். 1991 மே.21ஆம் தேதி அன்று, இராஜீவ், தமிழ்நாட்டில் உள்ள திருப்பெரும்புதூரில் நடந்த தேர்தல் பேரணியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) மனித வெடிகுண்டுத்தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டார். அவரது நினைவுநாள், "தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நாளாகவும்" அனுசரிக்கப்படுகிறது.

---

**9. உலக மூத்த குடிமக்கள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**




அ) ஆகஸ்ட் 20

**ஆ) ஆகஸ்ட் 21 ☑**

இ) ஆகஸ்ட் 22

ஈ) ஆகஸ்ட் 23

✓ முதியோர்களை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.21 அன்று உலக மூத்த குடிமக்கள் நாள் கொண்டாடப்படுகிறது. முதியோர்கள் சமுதாயத்திற்கு அளித்த பங்களிப்புகளை இந்நாள் அங்கீகரிக்கிறது & ஏற்றுக்கொள்கிறது. முதியோர்களின் அர்பணிப்பு, சாதனைகள் மற்றும் வாழ்நாள் முழுவதும் அவர்கள் இந்தச்சமுதாயத்திற்கு வழங்கிய சேவைகளை பாராட்டுவதற்கு இந்நாள் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

---

**10. புதிய இணையவெளி பாதுகாப்பு பல் வழங்குநர் அறக்கட்டளை நிதியத்தைத் (Cybersecurity Multi–Donor Trust Fund) தொடங்கியுள்ள நிறுவனம் எது?**

அ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ) ஐரோப்பிய மத்திய வங்கி

இ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஈ) உலக வங்கி ☑**

✓ உலக வங்கி அதன் திட்டங்கள் மற்றும் நிதியுதவி ஆகியவற்றில் சைபர் பாதுகாப்பு கருதுகோள்களின் கணிசமான பிரதிபலிப்பை உறுதி செய்ய உதவும் வகையில், சைபர் பாதுகாப்பு மேம்பாட்டு நிகழ்ச்சி நிரலை சிறப்பாக வரையறுக்கவும் மற்றும் முறையாக உருவாக்கவும் புதிய இணையவெளி பாதுகாப்பு பல் வழங்குநர் அறக்கட்டளை நிதியத்தைத் அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ உலக வங்கியின் பரந்த டிஜிட்டல் மேம்பாட்டு கூட்டாண்மை குடையின் கீழ் ஓர் அறக்கட்டளை நிதியமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த நிதியம் எஸ்டோனியா, ஜெர்மனி, ஜப்பான் மற்றும் நெதர்லாந்தினைச் சார்ந்த நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் தொடங்கப்பட்டது. நாடுகளும் அதன் குடிகளும் தற்போதைய டிஜிட்டல் மாற்றம் மற்றும் வளர்ச்சியை முழுமையாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்திக் கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு இது உதவுகிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. போர்விமானங்களைப் பாதுகாக்க அதிநவீன தொழில்நுட்பம்: டிஆர்டிஓ உருவாக்கம்**

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானங்களை எதிரி நாட்டு ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில், அதிநவீன 'சாஃப்' தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், எதிரி நாட்டு ஏவுகணைகளைத் திசை திருப்பிவிட்டு போர் விமானங்கள் பாதுகாப்பாக தப்பித்துவிட முடியும். இதன் சோதனை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, இந்தத் தொழில்நுட்பத்தை போர் விமானங்களில் சேர்க்கும் பணிகளை இந்திய விமானப் படை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து டிஆர்டிஓ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஜோத்பூர் மற்றும் புணேயில் உள்ள டிஆர்டிஓ ஆய்வகங்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த நவீன தொழில்நுட்பம், போர் விமானத்தில் பொருத்தும் வகையிலான 'சாஃப்' கேட்ரிட்ஜ் – 118/ஐ' என்ற கருவி உருவாக்கப்பட்டுள்ளது. அதில், சிறு அலுமினியம் அல்லது துத்தநாகம் பூசப்பட்ட நார்த் துகள்கள் லட்சக்கணக்கில் அடைக்கப்பட்டிருக்கும். போர் விமானம் பறந்து கொண்டிருக்கும்போது, இந்தத் துகள்களை வெளியேற்றி காற்றில் பறக்கவிடுவதன் மூலம், தாக்க வரும் எதிரி நாட்டு ஏவுகணையை ரேடார் உதவியுடன் திசை திருப்பிவிட முடியும். அதன் மூலம் போர்விமானத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

வான்படையின் தொடர் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், அதிக எண்ணிக்கையில் இந்தக் கருவியை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தி நிறுவனங்களுடன் இத்தொழில்நுட்பம் பகிர்ந்துகொள்ளப்பட உள்ளது என்று டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

---

**2. ஜூனியர் மல்யுத்தம்: பிபாஷாவுக்கு வெள்ளி**

ரஷியாவில் நடைபெறும் உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்திய வீராங்கனை பிபாஷா வெள்ளி வென்றார். அத்துடன் இரு வெண்கலப் பதக்கங்களும் இந்தியாவுக்கு கிடைத்தது. இதில் பிபாஷா, 76 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் கைலி ரெனீ வெல்கரிடம் தோற்று வெள்ளி பெற்றார்.

62 கிலோ கிராம் பிரிவு வீராங்கனையான சஞ்சு தேவி, அரையிறுதியில் அஜர்பைஜானின் பிர்குல் சோல்டானோவாவை 8–5 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். அதில் அவர் ரஷியாவின் அலினா கசாபிவாவை எதிர்கொள்ள இருக்கிறார்.

அதேபோல், 65 கிலோ பிரிவு அரையிறுதியில் இந்திய வீராங்கனை பாதேரி – ருமேனியாவின் அமினா ரோக்ஸானா கபெஸானை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றார். அதில் மால்டோவாவின் இரினா ரிகான்சியை அவர் சந்திக்கிறார்.

வெண்லகப் பதக்கத்துக்கான சுற்றுகளில் 50 கிலோ பிரிவில் சிம்ரன் 7–3 என்ற கணக்கில் பெலாரஸின் நடாலியா வராகினாவையும், 55 கிலோ பிரிவில் சிதோ – தொழில்நுட்பப் புள்ளிகள் அடிப்படையில் துருக்கியின் மெல்டா டெரென்க்ஸியையும் வீழ்த்தினர். குசும் (59 கிலோ), ஸ்னேஹா (72 கிலோ) ஆகியோர் அந்தச் சுற்றில் தோல்வி கண்டனர். பிங்கி (53 கிலோ), மான்சி (57 கிலோ) ஆகியோர் காலிறுதியில் தோற்றனர்.

---

**3. சைடஸ் கேடிலா கரோனா தடுப்பூசிக்கு DCGI ஒப்புதல்: சிறார்களுக்கும் செலுத்த அனுமதி**

கரோனா தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டின் அடிப்படையில் பயன்படுத்த இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆணையம் (DCGI) ஒப்புதல் அளித்தது. பிளாஸ்மிட் டிஎன்ஏ அடிப்படையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் தடுப்பூசி இது என்பதோடு, இந்தியாவில் 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் முதல் தடுப்பூசி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கடந்த ஜனவரி 16ஆம் தேதி முதல் கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. பாரத் பயோடெக் நிறுவனத்தின் 'கோவேக்ஸின்' மற்றும் சீரம் நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் 'கோவிஷீல்ட்' ஆகிய இரண்டு தடுப்பூசிகளும் அவசரகால பயன்பாட்டின் அடிப்படையில் முதலில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. பின்னர், ரஷியாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசிக்கு அனுமதி அளிக்கப்பட்டு, இந்தியாவில் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த தடுப்பூசிகள் அனைத்தும், இரண்டு தவணைகளாக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு செலுத்தக் கூடிய தடுப்பூசிகளாகும்.

இப்போது, நான்காவதாக குஜராத் மாநிலம் ஆமதாபாத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சைடஸ் கேடிலா மருந்து நிறுவனம், மத்திய உயிரி தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து முழுவதும் உள்நாட்டில் உருவாக்கியுள்ள 'சைகோவ்–டி' தடுப்பூசியை அவசரகால பயன்பாடு அடிப்படையில் பயன்படுத்த இந்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

**வித்தியாசம் என்ன?**

இது நாட்டில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள மூன்று தடுப்பூசிகளைப் போல் அல்லாமல், 3 தவணைகளாக செலுத்தக்கூடிய தடுப்பூசியாகும். இது, முதல் முறையாக 12 முதல் 18 வயது வரையிலான சிறார்களுக்கும் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பிளாஸ்மிட் டிஎன்ஏ அடிப்படையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் தடுப்பூசி இதுவாகும்.

இது 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் தட்பவெப்பநிலையில் சேமித்து வைக்கப்படுகிறது. இருந்தபோதிலும், 25 டிகிரி செல்ஷியஸ் தட்பவெப்ப நிலையில் குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு நல்ல நிலைத்தன்மையை இந்த தடுப்பூசி கொண்டிருப்பது தெரியவந்துள்ளது. அதன் காரணமாக இந்த தடுப்பூசியை பல்வேறு பகுதிகளுக்கு அனுப்புவது எளிது என்பதோடு, குளிரூட்டிகளில் ஏற்படும் பிரச்னை காரணமாக தடுப்பூசி வீணாவதும் குறையும்.

இந்த தடுப்பூசி பயன்பாட்டில் உள்ள மற்ற தடுப்பூசிகளைப் போன்று ஊசி மூலமாக அல்லாமல், 'ஃபார்மா ஜெட்' முறையை பயன்படுத்தி வலி இல்லாத வகையில் உடலில் செலுத்தக் கூடிய தடுப்பூசி என்று சைடஸ் கேடிலா நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆண்டுக்கு 10 முதல் 12 கோடி தடுப்பூசிகள் உற்பத்தி செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

**இதுகுறித்து மத்திய உயிரி தொழில்நுட்பத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:** சைடஸ் கேடிலாவின் தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டின் அடிப்படையில் பயன்படுத்துவதற்கான ஒப்புதலை டிசிஜிஐ அளித்தது. இது கரோனா நோய் பாதிப்பிலிருந்து சிறந்த பாதுகாப்பைத் தரும் என்பதோடு, உடலில் நோய் எதிா்ப்புத் திறனை நன்கு ஊக்குவிக்கும்.

இத்தடுப்பூசி, உருமாற்றம்பெறும் கரோனா தீநுண்மிகளுக்கு எதிராகவும் சிறப்பாக செயல்படக் கூடியதாகும். இந்த தடுப்பூசி 28,000 தன்னார்வலர்களுக்கு செலுத்தப்பட்டு நடத்தப்பட்ட மூன்றாம் கட்ட பரிசோதனையில், 66.6 சதவீத செயல்திறன் இருப்பது தெயிவந்துள்ளது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய கரோனா தடுப்பூசி பரிசோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது என்று தெரிவித்துள்ளது.

---

**4. உலக டேபிள் டென்னிஸ்: மணிகா–சத்தியன் ஜோடி சாம்பியன்**

உலக டேபிள் டென்னிஸ் கன்டென்டர் போட்டியில் இந்தியாவின் மணிகா பத்ரா / ஜி சத்தியன் இணை கலப்பு இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றது. மணிகா/சத்தியன் இணை தனது இறுதி ஆட்டத்தில், உலகின் 94ஆம் நிலையில் இருக்கும் ஹங்கேரிய ஜோடியான டோரா மதராசாஸ் / நான்டோர் எக்செகியை 11–9, 9–11, 12–10, 11–6 என்ற செட்களில் வீழ்த்தியது.

மணிகா / சத்தியன் இணை கலப்பு இரட்டையரில் அதிகம் இணைந்து பங்கெடுத்திருக்காத நிலையில், இந்த சாம்பியன் பட்டம் அவர்களுக்கு நினைவில் நிற்கக் கூடியதாக அமைந்துள்ளது. கலப்பு இரட்டையர் பிரிவில் மணிகா, மூத்த வீரரான சரத் கமலுடன் இணைந்து ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார். இந்த ஜோடி சமீபத்தில் டோக்கியோ ஒலிம்பிக்கிலும் களம் கண்டது.

இந்த உலக டேபிள் டென்னிஸ் போட்டியில் கலப்பு இரட்டையரில் சாம்பியனாகியுள்ள மணிகா, மகளிர் ஒற்றையரில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது. டோக்கியோ ஒலிம்பிக்கில் முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறிய சத்தியனுக்கு இந்தப் பட்டம் ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

---

**5. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆவணி மூலத் திருவிழா: இறைவன் விறகு விற்ற திருவிளையாடல்**

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆவணி மூலத்திருவிழாவில், இறைவன் விறகுவிற்ற லீலையுடன் திருவிளையாடல்கள் நிறைவடைந்தன.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் நடைபெறும் திருவிழாக்களில் முக்கியமானது ஆவணி மூலத்திருவிழா. ஆகஸ்ட் 5 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய ஆவணி மூலத் திருவிழாவில், மதுரையில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அனைத்தும் நிகழ்த்தப்படுகின்றன.

இதைத்தொடர்ந்து, கோயில் 2ஆம் பிரகாரத்தில் சந்திரசேகர் உற்சவம் ஆக.10ஆம் தேதி வரை நடைபெற்றது. ஆகஸ்ட்.11'இல் கருங்குருவிக்கு உபதேசத்துடன் திருவிளையாடல்கள் தொடங்கின. அதையடுத்து, நாரைக்கு முக்தியளித்தது, மாணிக்கம் விற்ற திருவிளையாடல், தருமிக்கு பொற்கிழி அருளியது, சிவனடியாருக்கு உலவாக்கோட்டை அருளியது, பாணனுக்கு அங்கம் வெட்டியது மற்றும் திருஞானசம்பந்தர் சைவ சமய ஸ்தாபித வரலாறு, வளையல் விற்ற திருவிளையாடல் மற்றும் அன்று இரவு பட்டாபிஷேகம், நரியை பரியாக்கிய லீலை ஆகியன நடைபெற்றன.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பிட்டுக்கு மண் சுமந்த லீலை கோயில் வளாகத்தில் நடைபெற்றது. தொடர்ந்து, பத்தாம் நாளன்று இறைவன் விறகு விற்ற லீலை நடைபெற்றது. இதில், தலையில் விறகு சுமக்கும் கோலத்துடன் சுந்தரேசுவரர் பிரியாவிடை மீனாட்சியம்மனுடன் எழுந்தருளினார். இத்துடன், கோயிலில் ஆவணி மூலத்திருவிழா திருவிளையாடல்கள் நிறைவடைந்தன.

---